திருப்புகழமிர்தம்



ஆசிரியர்

கிருபானந்தவாரி

பரிகாபி

புதிய வெளியீடுகள்

1. முருகன்

முருகப் பெருமான் திருநாமங்களின் விளக்கம், கந்தபுராணச் சுருக்கம், கந்த விரதங்கள், பழநித்தல வரலாறு, முருகன் அருள்பெற்றோர் சரிதங்கள், திருவுருவ வகைகள், முருக உபாஸனை முதலியவை அடங்கியது. கிரௌன் 1/8 அளவில் 120 பக்கங்கள் விலை ரூ. 1-00 (தபாற் செலவு வேறு)

2. திருப்புகழ் விரிவுரை

திருவருணை, திருக்காளத்தி—ஆகிய தலங்களுக்குரிய திருப்புகழ்ப் பாடல்கள் 82க்கு விரிவுரை அடங்கியது. டெமி 1/8 அளவில் 420 பக்கங்கள் விலை ரூ. 6 00 தபாற் செலவு (பதிவுகூலி உட்பட) ரூ. 1-55.

3. விநாயகர்

விநாயகர் வரலாறும், வழிபட்டோர் சரிதங்களும், வழிபடு முறையும், பல துதிப்பாடல்களும் அடங்கியது. 64 பக்கங்கள். விலை ஐம்பது காசுகள். தபாற் செலவு ஒரு பிரதிக்கு மட்டும் 20 காசுகள், ஒரு பிரதிக்கு மேல் வேண்டுபவர்கள் பதிவுத் தபாலில் பெற வேண்டும்.

4. கற்புக் கனிகள் (ஐந்தாவது புத்தகம்)

15 சிறுகதைகள் அடங்கியது — ரூ. 1-00

5. கற்புக் கனிகள் (ஆறுவது புத்தகம்)

14 சிறுகதைகள் அடங்கியது — ரூ. 1-00

6. வாரியார் விரிவுரை விருந்து

சிறிதும் ஓய்வு இன்றி நாள்தோறும் ஒரு ஊராகச் சென்று சொற்பொழிவு செய்து தமிழ்ப்பணி செய்துவரும் ஆசிரியரவர்கள், பலகாலும் சிந்தித்த சிந்தனைகளை அவ்வப்பொழுது எழுதி வெளியிட்டனர். அவைகளையெல்லாம் ஒன்று திரட்டி 'வாரியார் விரிவுரை விருந்து' என்று வானதிப் பதிப்பகத்தார் இப்பொழுது வெளியிட்டுள்ளார்கள், இது அன்பர்களுக்கு மிகவும் பயன்படும். பல நூல்களைப் படித்த பயனை இந்த ஒரு நூலால் பெறுவார்கள். 482 பக்கங்கள்; மிக அழகிய பதிப்பு. விலை ரூ 6-00 தபாற் செலவு ரூ. 1-40.

திருப்புகழமிர்தம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதங்களில் வெளிவரும்.

ஆண்டுச் சந்தா

இந்தியா	ரூ. 4-00
மற்ற நாடுகள்	ரூ. 7-00

மானேஜர், திருப்புகழமிர்தம் காரியாலயம்,
89, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

உ
முருகா



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 37	பரிதாபி ௵ — ஆடி ௴ ஜூலை, 1972	இதழ் 2

திருப்புகழ்

வண்டையொத் துக்கயல் கண்சுழற் றுப்புரு
வஞ்சிலைக் குத்தொடு அம்பையொத் துத்தொடை
வண்டுசுற் றுக்குழல் கொண்டலொத் துக்கமு
கென்பக்ரீவம்

மந்தரத் தைக்கட பொங்கிபத் துப்பணை
கொம்பையொத் துத்தன முந்து குப்பத்தெரு
வந்துளத் திப்பொரு மங்கையர்க் கைப்பொரு
ளன்பினாலே

கொண்டழைத் துத்தழு வுங்கைதட் டிற்பொருள்
கொண்டுதெட் டிச்சர சம்புகழ்க் குக்குன
குங்குழற் கிப்படி நொந்துகெட் டுக்குடில் மங்குறாமல்

கொண்டுசத் திக்கட லுண்டுகுப் பத்துனி
னன்பருக் குச்செயல் தொண்டுபட் டுக்கமழ்
குங்குமத் திற்சர ணம்பிடித் துக்கரை
யென்றுசேர்வேன்

அண்டமிட் டிக்குட டிண்டிமிட் டிக்குகு
டந்தகொட் டத்தகு டிங்குதொக் கத்தம
டஞ்சகட் டைக்குண கொம்புடக் கைக்கிட
லென்பதாளம்

அண்டமெட் டுத்திசை யும்பல்சர்ப் பத்திரள்
கொண்டல்பட் டுக்கிரி யும்பொடித் துப்புல
னஞ்சவித் துத்திர ளண்டமுட் டத்துகள் வந்தசூரர்

கண்டமற் றுக்குட லென்புநெக் குத்தச
னங்கடித் துக்குடி லஞ்சிவப் பச்செநிர்
கண்தெறிக் கந்தலை பந்தடித் துக்கையி
லங்குவேலால்

கண்களிக் கக்கக னந்துளக் கப்புக
ழிந்திரற் குப்பதம் வந்தளித் துக்கன
கம்பலத் திற்குற மங்கைபக் கத்துறை தம்பிரானே.

பதவுரை

அண்டம் அண்டங்களில், மிட்டி (மிண்டி) = நெருங்கி, குட = வளைந்து சூழ, டிண்டி மிட்டி = டிண்டி மிட்டி என்று, குடந்தம் கொட்ட = குடமுழா என்ற வாத்தியம் முழக்கஞ் செய்து, தகு = அவ்வொலிக்குத் தகுந்தபடி, டிங்கு தொக்க = டிங்கு என்னும் ஒலி ஒன்று கூட, தமடம் = தமடம் என்ற தம்பட்டமும், சகட்டை சகண்டை என்ற வாத்தியமும், குண கொம்பு = சிறந்த ஊது கொம்பும், டக்கைக்கு = இடக்கையால் கொட்டும்தோற் கருவியும் ஆகிய இவைகட்கு, இடல் என்ப தாளம் = உதவியாய் தாளம் ஒலிக்கவும், அண்டம் = அண்டங்களும், எட்டு திசை = எண் திசைகளும், உம்பல் = அஷ்ட யானைகளும், சர்ப்ப திரள் = பாம்பின் கூட்டங்களும், கொண்டல்பட்டு = மேகமும் குலைபட்டும், கிரியும் பொடித்து = மலைகளும் பொடியாகியும், புலன் அஞ்சு அவித்து = ஐந்து புலன்களைக் கெடுத்தும், திரள் அண்டம் முட்ட துகள் = திரண்ட அண்டங்கள் முழுமையுந் தூசி உண்டாகவும், வந்த சூரர் = போருக்கு வந்த சூரர்கள், கண்டம் அற்று = கழுத்து அறுபட்டுப் போய், குடல் என்பு நெக்கு = குடலும் எலும்பும் நெகிழ்ந்து தளர்ச்சியுற்று, தசனம் கடித்து = பற்களைக் கடித்து, குடிலம் சிவப்ப = வளைந்த தலைமயிர் சிவக்க, செநிர் கண் தெறிக்க = உதிரம் கண்களினின்றும் வெளிப்பட்டுச் சிதற, தலை பந்து அடித்து = அசுரர்களின் தலைகளைப் பந்தடிப்பதுபோல் அடித்துத் தள்ளி, கை இலங்கு வேலால் = திருக்கரத்தில் இலங்கும் வேலாயுதத்தால், (அழித்து), கண் களிக்க = கண் குளிர்ச்சியடைந்து மகிழ, ககனம் துளக்க = விண்ணுலகம் செழிப்புற, புகழ் இந்திரற்கு பதம் வந்து அளித்து = புகழ்கின்ற இந்திரனுக்கு அவனுடைய இந்திர பதவியை அருள்புரிந்து வழங்கி, கனக அம்பலத்தில் = பொன்னம்பலத்தில், குற மங்கை பக்கத்து உறை = வள்ளியம்மையின் அருகில் விற்றிருக்கும், தம்பிரானே = தனிப்பெருந் தலைவரே! வண்டை

ஒத்து = கருவண்டினை நிகர்த்த, கயல் கண் = கயல் மீனையொத்த கண் சுழற்சியால், புருவம் சிலைக்கு தொடு அம்பை ஒத்து = புருவமாகிய வில்லில் தொடுக்கப்பட்ட அம்பை நிகர்க்கவும், தொடை வண்டு சுற்று குழல் கொண்டல் ஒத்து = அணிந்துள்ள மாலையில் வண்டுகள் சுற்றுகின்ற கூந்தலானது மேகத்தை நிகர்க்கவும், க்ரீவம் கமுகு என்ப = கழுத்து கமுகு போன்றது என்று சொல்லவும், மந்தரத்தை = மந்தர மலையையும், கடம் பொங்கு இபத்து = மதம் பொங்குகின்ற யானையின், பணை கொம்பை ஒத்து = பருத்த தந்தங்களையும் ஒத்து, தனம் முந்து குப்ப (கூப்ப) = கொங்கைகள் முன்னிட்டுக் குவிய, தெரு வந்து = தெருவில் வந்து, எத்தி பொரும் = வஞ்சித்துச் சண்டை செய்யும், மங்கையர் = பொது மாதர்கள், கை பொருள் அன்பினலே = தமது கையில் கிடைத்த பொருளின் பொருட்டுக் காட்டும் அன்பினலே, அழைத்துக் கொண்டு = தமது வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போய், தழுவும் கை = தழுவும் கைகளால், தட்டில் பொருள் கொண்டு = தட்டிலே பொருளைப் பெற்றவுடன், தெட்டி = வஞ்சனை எண்ணத்துடன், சரசம் = காமலீலைகளைச் செய்தும், புகழ்க்கு = புகழ்ந்தும், குனகும் குழற்கு = கொஞ்சிப் பேசுகின்ற கூந்தலையுடைய பொது மாதர் பொருட்டு, இப்படி = இவ்வண்ணம், நொந்து = அடியேன் மனம் நொந்து, குடில் கெட்டு = உடல் நலங் குன்றி, மங்குருமல் = வாட்டம் அடையாமல், சத்தி கொண்டு = தவ வலிமை கொண்டு, கடல் உண்டு உகுப்ப = கடலை உண்டு உமிழ்ந்து, துன் நின் அன்பருக்கு = உம்மை அடுத்த உமது அன்பராகிய அகத்தியருக்கு, செயல் தொண்டு பட்டு = பணிசெய்து தொண்டு பூண்டு, கமழ் குங்குமத்தின் = நறுமணம் வீசுகின்ற குங்குமச் செஞ்சாந்துடன் கூடிய, சரணம் பிடித்து = திருவடிகளைப் பற்றி, கரை என்று சேர்வேன் = முத்திக் கரையை அடியேன் எந்நாள் சேருவேன்?

பொழிப்புரை

அண்டங்களில் நெருங்கி வளைந்து சூழ, டிண்டிமிட்டி என்று குட முழா முழக்கஞ் செய்து, அவ்வொலிக்குத் தகுந்த "டிங்கு" என்னும் ஒலி ஒன்று கூட, தம்பட்டம், சகண்டை, ஊது கொம்பு, இடக்கை என்ற இந்த வாத்தியங்கட்கு உதவியாய் ஒலிக்குந் தாளம்; அண்டங்களும், எண்திசைகளும், எட்டுத்திசை யானைகளும், எட்டு நாகங்களும், மேகமும் குலைபட்டு, மலைகளும் பொடியாய், ஐம்புலன்களையும் அவித்து, திரண்ட அண்டங்களில் முழுமையும் தூசி உண்டாக எதிர்த்து வந்த சூரர்கள், கழுத்து அறுபட்டு, குடலும் எலும்பும் நெகிழ்ந்து, பற்களைக் கடித்து, தலைமயிர் சிவப்ப, உதிரம் கண்களில் இருந்து வெளிப்பட்டுச் சிந்த, அச்சூரர்களின் தலை

களைப் பந்தடிப்பது போல் கையில் விளங்கும் வேலாயுதத்தால் அடித்துத் தள்ளி, கண் களிக்க, விண்ணுலகம் மீண்டுந் தழைக்க, புகழ்கின்ற தேவேந்திரனுக்கு இந்திர பதவியை நல்கிப் பொன்னம்பலத்தில் வள்ளி பிராட்டியின் பக்கத்தில் வீற்றிருக்கும் தனிப்பெருந் தலைவரே! வண்டு போன்ற கயல் மீனை யொத்த கண் தன் சுழற்சியால் புருவமாகிய வில்லில் தொடுக்கப்பட்ட அம்பை நிகர்க்கவும், வண்டானது சுற்று கின்ற மாலையை அணிந்துள்ள கூந்தல் மேகத்தை நிகர்க் கவும், கழுத்து பாக்குபோல் உளது என்று சொல்லும்படியும், மந்தர மலையையும், மதம் பொழிகின்ற யானையின் தந்தத்தை யும் ஒத்த கொங்கை முன்னிட்டுக் குவிய, தெருவில் வந்து வஞ்சித்துச் சண்டை செய்யும் மாதர்கள் தமது கையில் கிடைத்த பொருளின் பொருட்டுக் காட்டும் அன்பினால், தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் தழுவுங் கைகளால், தட்டிலே பொருளைப் பெற்றவுடன், வஞ்சனை எண்ணத்துடன் காம லீலைகளைச் செய்தும், புகழ்ந்தும் கொஞ்சியும் பேசுகின்ற கூந்தலையுடைய பொதுமாதர்களின் பொருட்டு இவ்வண்ணம் அடியேன் உள்ளம் நொந்து உடல் வாட்டமடையாமல் தவ வலிமையால் கடலை உண்டு உமிழ்ந்து தேவரீரை யடுத்த உமது அன்பராகிய அகத்திய முனிவருக்குத் தொண்டு செய்து, நறுமணம் வீசும் நறுஞ் சாந்துடன் கூடிய திருவடிகளைப் பற்றி முத்திக்கரையை என்று சேருவேன்?

விரிவுரை

வண்டை யொத்துக் கயல் கண் சுழற்றுப்புரு வஞ்சிலைக் குத்தொடு அம்பை யொத்து:—

பொது மாதர்களின் கண்ணை அம்பு என்று புலவர்கள் உருவகஞ் செய்து கூறுவது மரபு.

அம்பு வேகமாக வந்து இளைஞர்களின் உள்ளத்தைப் பிளக்கும். இவ்வாறு கண்ணாகிய அம்பை வில்லில் தொடுத்து விடவேண்டும். புருவத்தை வில்லாக அருணகிரியார் அதிமதுர மாக உருவகஞ் செய்துள்ள அழகு மிகமிக அழகாக அமைந் துளது. இத்தகைய உவம அழகு வேறு எங்கும் காண இயலாது. உவமைத்திறம் உவகையை ஊட்டுகின்றது.

கட பொங்கிபத்து:—

கடம் பொங்கு இபம். கடம்—மதம். மதம் பொங்கி வழிகின்ற யானை.

மாதர்களின் தனம் மந்தர மலை போலவும் யானையின் தந்தம் போலவும் பருத்துப் பணைத்து விளங்குகின்றது என்றார்.

தன முந்து குப்ப:—

பொது மாதர்களின் தனங்கள் முற்பட்டுத் தெரியுமாறு குவிந்து காட்சி தரும் இயல்புடையது. தனம் முந்து குப்ப—கூப்ப என்ற சொல் குப்ப எனக்குறுகியது. கூப்ப—குவிய எனப் பொருள் செய்க.

குனகுங் குழற்கு:—

குனகுதல்—கொஞ்சிப் பேசுதல்; குழற்கு—குழலையுடையார்க்கு:

"இத்தகு பொது மாதர் வலைப்பட்டு உள்ளமும் உடலும் வெந்து நொந்து அழிதல் கூடாது" என்று இப்பாடலில் அடிகளார் அறவுரை பகர்கின்றார்.

கொண்டு சத்தி:—

தவ வலியைக் கொண்டு அகத்தியர் இடையருது முருகனுடைய ஆறெழுத்தை ஓதுவதால் கடலைக் குடிக்கும் ஆற்றல் பெற்றார்.

கட லுண்டுகுப் பத்துனி னன்பருக்கு:—

கடல் உண்டு உகுப்பத் துன் நின் அன்பர் என்று பதப் பிரிவு செய்க.

துன்—நெருங்குதல். முருக வேளை நெருங்கியவர் அகத்தியர். இத்தகைய சிறந்த முருகபக்தராகிய அகத்திய முனிவருக்கு நாம் தொண்டுபட வேண்டும். இவ்வாறு அகத்தியருக்கு அடிமை பூண்டால் முத்திக்கரை சேரலாம் எனவுணர்க.

இத் திருப்புகழின் பிற்பகுதி யுத்தகள வர்ணனையை விளக்குகின்றது.

செநிர்—செம் நீர்; உதிரம். கண்களில் வெளிப்பட்டது.

கனகம்பலம்:—

கனகம்பலம்—பொன்னம்பலம். சிதம்பரத்தில் குமாரக் கடவுள் குறவள்ளியுடன் எழுந்தருளி யருள்புரிகின்றார்.

கருத்துரை

பொன்னம்பலம் மேவிய முருகா! அகத்தியருக்குத் தொண்டு செய்து முத்திக்கரை சேர அருள்புரிவாய்!

திருப்புகழ்

கங்கு லின்குழற் கார்மு கஞ்சசி
மஞ்ச ளின்புயத் தார்ச ரம்பெறு
கண்கள் கொந்தளக் காது கொஞ்சுக செம்பொனுரம்

கந்த ரந்தரித் தாடு கொங்கைக
ளும்ப லின்குவட் டாமெ னுங்கிரி
கந்த முஞ்சிறுத் தேம லும்பட சம்பைபோல

அங்க மைந்திடைப் பாளி தங்கொடு
குந்தி யின்குறைக் கால்ம றைந்திட
அஞ்சி லம்பொலிப் பாட கஞ்சரி கொஞ்சமேவும்

அஞ்சு கங்குயிற் பூவை யின்குரல்
அங்கை பொன்பறிக் கார பெண்களொ
டண்டி மண்டையர்க் கூழி யஞ்செய்வ
தென்றுபோமோ

சங்கு பொன்தவிற் காள முந்துரி
யங்கள் துந்துமிக் காட திர்ந்திட
சந்த செந்தமிழ்ப் பாணர் கொஞ்சிட அண்டகோசம்

சந்தி ரன்பதத் தோர்வ ணங்கிட
இந்தி ரன்குலத் தோர்பொ ழிந்திட
தந்தி ரம்புயத் தார்பு கழ்ந்திட வந்தசூரைச்

செங்கை யுஞ்சிரத் தோடு பங்கெழ
அந்த கன்புரத் தேற வஞ்சகர்
செஞ்ச ரந்தொடுத் தேக டம்புரி கந்தவேளே

திங்க ளொண்முகக் காமர் கொண்டவள்
கொங்கை மென்குறப் பாவை யுங்கொடு
செம்பொ னம்பலத் தேசி றந்தருள் தம்பிரானே.

பதவுரை

சங்கு = சங்கு, பொன் தவில் = அழகிய தவில், காளம் = ஊது கொம்பு, தூரியங்கள் = முரசப் பறைகள், துந்துபி காடு அதிர்ந்திட =

பேரிகை என்ற வாத்தியக் கூட்டங்கள் அதிர்ச்சி செய்து ஒலிக்கவும், சந்த செம் தமிழ்=அழகிய செந்தமிழ்ப் பாடல்கள் பாடவல்ல, பாணர் கொஞ்சிட=பாணர்கள் அன்புடன் பாடவும், அண்ட கோசம்=அண்ட கடாகத்தில் வாழ்பவரும், சந்திரன் பதத்தோர் வணங்கிட=சந்திர மண்டலத்தில் உள்ளோரும் வணங்கவும், இந்திரன் குலத்தோர் பொழிந்திட=இந்திராதி தேவர்கள் பூமாரி பொழியவும், தந்திரம் புயத்தோர் புகழ்ந்திட=யாழ் ஏந்தும் தோள் களையுடைய கந்தருவர்கள் புகழ்ந்திடவும், வந்த சூரை=எதிர்த்து வந்த சூரனுடைய, செம் கையும்=செவ்விய கைகளும், சிரத்தோடு பங்கு எழ=சிரத்துடன் பாகப்படும்படி துண்டாக அற்றுப் போகவும், வஞ்சகர் அந்தகன் புரத்து ஏற=அரக்கர்கள் இயமபுரத்தில் போய்ச் சேரவும். செம் சரம் தொடுத்து=செவ்விய அம்புகளைச் செலுத்தி, நடம் புரி கந்த வேளே=நடனம் புரிந்த கந்தக் கடவுளே! திங்கள் ஒண்முக=சந்திரனைப் போன்றுகுளிர்ந்த ஒளியையுடைய திருமுகமும், காமர் கொண்டவள்=அழகும் உடையவளும், கொங்கை மென் குற பாவையும் கொண்டு=தனங்களும் மென்மையும் உடையவளும் ஆகிய வள்ளிபிராட்டியுடன், செம் பொன் அம்பலத்தே சிறந்து அருள்=செம்பொன்னால் ஆகிய கனகசபையில் மேம்பட்டு விளங்கி அருள் புரியும், தம்பிரானே=தனிப் பெருந் தலைவரே! கங்குலின் குழல்கார்=இருள் போன்ற கூந்தலாகிய மேகத்தைக் கொண்டவர் கள், முகம் சசி=முகம் சந்திரனை யொத்தவர்கள், மஞ்சளின் புயத் தார்=மஞ்சள் விளங்கும் கையினர்கள், சரம் பெறு கண்கள்=அம்பு போன்ற கண்களையுடையவர்கள், கொந்தளம் காது கொஞ்சுக=தலை மயிர்ச் சுருள் காதைக் கொஞ்சும்படிக் கொண்டவர்கள், செம் பொன் ஆரம்=செம்பொன் மாலைகள், கந்தரம் தரித்து=கழுத்தில் அணிந்து, ஆடு கொங்கைகள்=அசைகின்ற கொங்கைகள், உம்பலின் குவடு ஆம் கிரி=யானை போலும் திரண்ட மலையாய், கந்த மும்=அதில் நறுமணமும், சிறு தேமலும் பட=சிறிய தேமலும் தோன்ற, சம்பை போல=மின்னல் போலே. இடை அங்கு அமைந்து=இடையானது அங்கு அமையப் பெற்று, பாளிதம் கொடு=பட்டு ஆடை கொண்டு, குந்தியின் குறை கால் மறைந்திட= குதிக்கால் மறையும்படி உடுத்து, அண் சிலம்பு=அடுத்துள்ள சிலம் பும், ஒலி பாடகம்=ஒலிக்கின்ற பாடகம் என்ற காலணியும், சரி= கைவளையுடனே, கொஞ்ச மேவும்=ஒலிக்க உள்ளவர்களாய், அஞ்சு கம்=அழகிய கிளி, குயில்=குயில், பூவை=நாகணவாய்ப் புள், இன் குரல்=இவைகளின் இனிய குரல்களைக் கொண்டவர்களாய், அம் கை பொன் பறிகார பெண்களொடு=அழகிய கையில் பொன்னைப் பறிக் கின்ற கொள்ளைக்காரர் போன்ற விலைமாதர்களை, அண்டி மண்டை யர்க்கு=நெருங்கி அவ் வேசையர்க்கு, ஊழியம் செய்வது என்று போமோ=சேவக வேலை செய்வது என்று தொலையுமோ?

பொழிப்புரை

சங்கு, அழகிய தவில், ஊதுகொம்பு, போர்முரசுகள், பேரிகைகள் ஆகிய வாத்தியக் கூட்டம் அதிர்ச்சி செய்து ஒலிக்கவும், அழகிய செந்தமிழ்ப் பாடல்களில் வல்ல பாணர்கள் அன்புடன் பாடவும், அண்ட உருண்டையின் மேல் ஒடுவரையில் உள்ளோரும், சந்திரமண்டலத்தில் உள்ளோரும் வணங்கவும், இந்திராதி இமையவர் மலர்மழை பொழியவும், யாழ் ஏந்திய கையராம் கந்தருவர்கள் புகழவும், எதிர்த்து வந்த சூரனுடைய, சிவந்த கைகளும் சிரமும் துண்டித்து விழவும், வஞ்சக அரக்கர்கள் இயமபுரத்தில் குடியேறவும், செவ்விய அம்பைச் செலுத்தி நடனம்புரிந்த கந்தவேளே! சந்திர ஒளியும் குளிர்ச்சியும் உடைய திருமுகமும், அழகும், தனபாரங்களும் மென்மையும் பூண்ட வள்ளிநாயகியுடன், செம்பொன்னால் ஆகிய கனக சபையில் சிறந்து இருந்து அருள்புரிகின்ற தனிப் பெருந் தலைவரே! இருண்ட மேகம் போன்ற கூந்தலையுடையவர்கள்; சந்திரனை யொத்த முகத்தையுடையவர்கள்; மஞ்சள் விளங்கும் கையினர்கள்; அம்பு போன்ற கண்களையுடையவர்கள்; காதுகளைத் தடவுகின்ற தலைமயிர்ச் சுருள்களை யுடையவர்கள்; சிவந்த பொன் மாலைகளை அணிந்த கழுத்தினர்கள்; யானைபோல் திரண்டு மலைபோல் உயர்ந்து அசைந்து நறுமணமும் சிறு தேமலும் படைத்த அசைகின்ற கொங்கைகளை யுடையவர்கள்; மின்னல்போல் அமைந்த இடையை யுடையவர்கள்; குதிக்கால் மறையும்படி பட்டுப் புடவை யுடுத்தவர்கள்; சிலம்பும் பாடகமும் கைவளையல்களும் ஒலிக்க அணிந்தவர்கள்; அழகிய கிளி, குயில், நாகணவாய்ப் பறவை போன்ற இனிய குரலையுடையவர்கள்; கையில் உள்ள பணத்தைப் பறிப்பவர்கள் ஆகிய பொது மாதரையடுத்து அவருக்கு ஏவல் புரியும் புன்மை என்று தொலையுமோ ?

விரிவுரை

இத் திருப்புகழின் முதற்பகுதி விலைமகளிரின் தன்மையை விரித்துரைக்கின்றது.

மண்டையர்க் கூழியஞ் செய்வ தென்றுபோமோ :—

மண்டையர்—வேசையர்.

இறைவனுக்கும் இறைவனுடைய அடியார்க்கும் ஏவல் செய்யாது, பொதுமகளிர் வசமாகி, அவர்கள் இட்ட ஏவலைச்

செய்து மாநதர் கெடுகின்றூர்கள். இந்த அவலம் போக வேண்டும் என்று முருகனிடம் முறையிடுகின்றூர்.

"............மாதரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்த அருள் தருவாயே"
—(குமரகுரு பரமுருக) திருப்புகழ்.

துரியங்கள் :—

தூரியம் என்ற சொல் குறுகி துரியம் என வந்தது.

தூரியம்—முரசப்பறை.

முருகப் பெருமான் சூரபன்மனுடன் போர் புரிந்தபோது சங்கு, தவில், காளம், தூரியம், பேரிகை முதலிய வாத்தியங்கள் எண் திசைகளும் அதிர்ச்சி யடையுமாறு முழக்கஞ் செய்தன.

சந்த செந்தமிழ்ப் பாணர் கொஞ்சிட :—

பாணர்—இசைபாடும் மரபினர்கள். இவர்கள் அழகிய தமிழ்ப்பாடல்களால் முருகனைப் புகழ்ந்து பாடினூர்கள்.

தந்திரம் புயத்தார் :—

தந்திரம்—யாழ் நரம்பு. இது ஆகுபெயராக யாழை உணர்த்தியது. யாழ் ஏந்திய கரத்தினராகிய கந்தருவர்கள் முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடினூர்கள்.

செஞ்சரந் தொடுத்தே நடம்புரி கந்தவேளே :—

சூரபன்மனை வதைத்தவுடன் முருகவேள் ஆடிய கூத்து துடிக்கூத்து. அசுரர் படைகள் அனைத்தையும் வென்ற பின் முருகவேள் குடையைத் தாழ்த்து ஆடிய கூத்து குடைக் கூத்து.

"சூர்திறங் கடந்தோன் ஆடிய துடியும்"
"படை வீழ்த் தவுணர் பையுள் எய்தக்
குடை வீழ்த் தவர்முன் ஆடிய குடையும்"
—சிலப்பதிகாரம்—கடலாடு—51.

இது வீரத்தைக் குறிக்கும் வீரநடனம் ஆகும்.

கருத்துரை

அம்பலத்தமர்ந்த அண்ணலே! இருமனப் பெண்டிருக்கு ஏவல் செய்யும் இழிவுடைமை தீர இன்னருள் செய்.

திருப்புகழ்

கொந்த ளம்புழு கெந்த வண்பனி
ரம்ப சம்ப்ரம ணிந்த மந்தர
கொங்கை வெண்கரி கொம்பி ணங்கிய மடமாதர்

கொந்த ணங்குழ லின்ப மஞ்சள
ணிந்து சண்பக வஞ்சி ளங்கொடி
கொஞ்சு பைங்கிளி யன்பெனுங்குயில் மயில்போலே

வந்து பஞ்சணை யின்ப முங்கொடு
கொங்கை யும்புய முந்த ழும்புற
மஞ்சு வொண்கலை யுங்கு லைந்தவ மயல்மேலாய்

வஞ்சி னங்கள்தி ரண்டு கண்செவி
யுஞ்சு கங்கள்தி ரும்பி முன்செய்த
வஞ்சி னங்களு டன்கி டந்துட லழிவேனோ

தந்த னந்தன தந்த னந்தன
திந்தி மிந்திமி திந்தி மிந்திமி
சங்கு வெண்கல கொம்பு துந்துமி பலபேரி

சஞ்ச லஞ்சல கொஞ்சு கிண்கிணி
தங்கு டுண்டுடு டுண்டு டன்பல
சந்தி ரம்பறை பொங்கு வஞ்சகர் களமீதே

சிந்த வெண்கழு கொங்கு பொங்கெழு
செம்பு ளங்கரு டன்ப ருந்துகள்
செங்க ளந்திகை யெங்கு மண்டிட விடும்வேலா

திங்க ளிந்திர னும்ப ரந்தர
ரும்பு கழ்ந்துரு கும்ப ரன்சபை
செம்பொ னம்பல மங்கொ ளன்பர்கள் பெருமாளே.

பதவுரை

தந்தனந்தன தந்தனந்தன திந்திமிந்திமி திந்திமிந்திமி = தந்த னந்தன...திந்திமிந்திமி என்ற ஓசையுடன், சங்கு = சங்கமும், வெண் கல சொம்பு = வெண்கல ஊது கொம்பும், துந்துமி = துந்துமியும், பல பேரி = பலவகைய பேரிகைகளும், சஞ்சலஞ்சல கொஞ்சு கிண்கிணி = சஞ்சலஞ்சல என்று இனிது ஒலிக்கும் கிண்கிணியும், டுண்டுடு டுண்டு டன் தங்கு = டுண்டுடு டுண்டு என்ற ஒலி[?] தங்குகின்ற, பல

சந்திரம் பறை = சந்திரன் போல வட்ட வடிவுள்ள பல அழகிய பறைகளும், பொங்க = மிகுதியாக முழங்க, வஞ்சகர் களம் மீதே சிந்த = அசுரர்கள் போர்க்களத்திலே மடிய, வெண் கழுகு = வெண்ணிறக் கழுகுகளும், ஓங்கு பொங்கு எழு செம்புள் கருடன் = ஓங்கி உயர்ந்து எழுகின்ற செம்மை நிறப் பறவையாகிய கருடனும், பருந்துகள் = பருந்துகளும், செம் களம் திசை எங்கும் மண்டிட = உதிரத்தால் சிவந்த போர்க்களத்தில் எல்லாத் திசைகளிலும் நெருங்கி உலாவ, விடும் வேலா = செலுத்திய வேலாயுதரே! திங்கள் = சந்திரனும், இந்திரன் = இந்திரனும், உம்பர் = தேவர்களும், அந்தரர் = ஏனைய விண்ணுலக வாசிகளும், புகழ்ந்து உருகும் = புகழ்ந்தும் உள்ளம் உருகுகின்ற, பரன் சபை = இறைவனுடைய சபையாகிய, செம் பொன் அம்பலம் = செவ்விய பொன்னம்பலத்தை, அம் கொள் = அழகாகக் கொண்ட, அன்பர்கள் பெருமாளே = அன்பர்கள் போற்றும் பெருமையிற் சிறந்தவரே! கொந்தளம் = கூந்தலில், புழு = புனுகு சட்டமும், கந்த வண் பனிர் = வாசனை வீசும் பன்னீரும், ரம்ப = நிரம்பவும், சம்ப்ரம் அணிந்து = சிறப்பாக அணிந்துள்ளவர்களும், மந்தர கொங்கை = மந்தர மலைபோல் பருத்த கொங்கைகளாகிய, வெண் கரி கொம்பு இணங்கிய = யானையின் வெண் தந்தங்கள் பொருந்தியுள்ள, மடமாதர் = அழகிய பெண்கள், கொந்து அண் அம் குழல் = பூங் கொத்துக்களுடன் கூடிய அழகிய கூந்தலையுடையவராய், இன்ப மஞ்சள் அணிந்து = மகிழ்ச்சியைத் தரும் மஞ்சளைப் பூசிக்கொண்டு, சண்பகம் = சண்பக மலர் சூடி, வஞ்சி இளம் கொடி = இளம் வஞ்சிக் கொடி போல் விளங்கி, கொஞ்சு பைங்கிளி = கொஞ்சுகின்ற பச்சைக் கிளி போலவும், அன்பு எனும் குயில் = அன்பு வாய்ந்த குயில் போலவும், மயில் போலே வந்து = மயில்போலவும் வந்து, பஞ்சு அணையில் = பஞ்சு மெத்தையில், இன்பமும் கொடு = இன்பத்தையுங் கொடுக்கின்ற, கொங்கையும் = தனங்களும், புயங்களும் தழும்பு உற = தோள்களும், வடுவுண்டாக, மஞ்சு ஒண் கலையும் குலைந்து = அழகிய நல்ல ஆடையும் கலைந்து, அவ மயல் மேலாய் = வீணான காம இச்சை மிகுந்து, வஞ்சினங்கள் திரண்டு = சபத மொழிகள் நிரம்பச் சொல்லி, கண் செவியும் சுகங்கள் திரும்பி = கண்கள் காதுகள் இவைகள் கொடுத்திருந்த சுகங்கள் மாறுபட்டு, முன் செய்த வஞ்சினங்களுடன் = முன் செய்திருந்த சபத மொழிகள் நிறைவேறாமல், கிடந்து = பாயில் படுக்கையாய்க் கிடந்து, அழிவேனோ = உடலம் அழிந்து படுவேனோ?

பொழிப்புரை

தந்தனந்தன தந்தனந்தன திந்திமிந்திமி திந்திமிந்திமி என்று ஒலிக்கின்ற சங்குகள். வெண்கல ஊது கொம்புகள், துந்துபிகள், பலவகையான பேரிகைகள், சஞ்சலஞ்சல என்று

கொஞ்சுகின்ற கிண்கிணிகள், டுண்டுடு டுண்டு என்று சந்திரனைப் போன்ற வட்டமான பல வாத்தியங்கள் எல்லாம் சேர்ந்து மிகுதியாக முழங்க, வஞ்சகர்களாகிய அரக்கர்கள் போர்க்களத்தில் வந்து மடிய, வெண் கழுகுகளும், ஓங்கி உயர்ந்து எழுகின்ற செம்மை நிறப் பறவையாகிய கருடனும் பருந்துகளும், உதிரத்தால் சிவந்த போர்க்களத்தில் திசை எங்கும் பறந்து உலாவச் செலுத்திய வேலாயுதரே! சந்திரனும் இந்திரனும் தேவர்களும் மற்ற விண்ணுலக வாசிகளும் புகழ்ந்து உருகும் இறைவனுடைய சபையாகிய பொன்னம் பலத்தை அழகாகக் கொண்ட, அன்பர்கள் போற்றும் பெருமித முடையவரே; புனுகு சட்டமும் பன்னீரும் நிரம்பச் சிறப்பாக அணிந்த கூந்தலும், மந்தரகிரி போலும் யானையின் வெண் தந்தங்களைப் போலும் உள்ள கொங்கைகளும் உடைய பொது மாதர்கள், பூங்கொத்துக்களையுடைய அழகிய தலை முடியுடையவராய், சுகந்தரக்கூடிய மஞ்சளைப் பூசி, சண்பக மலர் சூடி, இளம் வஞ்சிக் கொடிபோல் விளங்கி, கொஞ்சுகின்ற பச்சைக்கிளி போலவும், அன்பு வாய்ந்த குயில் போலவும், மயில் போலவும் வந்து, பஞ்சுமெத்தையில் இன்பத்தைத் தருகின்ற கொங்கைகளும் தோளும் வடுவுண்டாக, அழகிய நல்ல ஆடை கலைந்து, வீணை ஆசை மிகுந்து, சபதமொழிகளை நிரம்பக் கூறி, கண்கள் காதுகள் கொடுத்திருந்த சுகங்கள் மாறுபட்டு, முன் செய்திருந்த சபதமொழிகள் நிறைவேறாமல் பாயில் படுக்கையாய்க் கிடந்து, அடியேன் உடலம் அழிவேனோ ?

விரிவுரை

இத்திருப்புகழ்ப் பாடலின் முற்பகுதி பொது மகளிரது இயல்புகளைப் பற்றிப் பேசுகின்றது.

கொந்தளம் :—

கொந்தளம்—கூந்தல்.

புழுகெந்த வண்பனிர் :—

புழுகு கந்த வண் பன்னிர்—புழுகு—புனுகு சட்டம். தெளிந்த பன்னிர்.

ரம்ப :—

நிரம்ப என்ற சொல் ரம்ப என வந்தது.

கொந்தணங் குழல் :—

கொந்து அண் அம் குழல்.

கொந்து—பூங்கொத்து; அண்—நெருங்கிய; அம்—அழகிய; குழல்—கூந்தல்.

பஞ்சணை :—

பஞ்சு அணை—பஞ்சணை. பஞ்ச அணை என்று பிரித்தால் பஞ்ச சயனம் என்று ஆகும்.

அன்னத்தின் தூவி, மயில் தூவி, இலவம் பஞ்சு, வெண் பஞ்சு, செம்பஞ்சு என்ற ஐந்தால் அமைத்தது பஞ்ச சயனம்.

வஞ்சினங்கள் திரண்டு :—

மாதர்மீது வைத்த ஆசைப் பெருக்கத்தால் "உனக்குப் புலிப்பால் தருவேன்," "சிந்தாமணி தருவேன்" என்பனவாதி சபதமொழி கூறுவர். பின்னர் அவைகளை நிறைவேற்ற முடியாமல் வருந்துவர்.

பிற்பகுதியான 3 அடிகள் போர்க்கள வருணனையாகும்.

வெண்கழு கொங்கு பொங்கெழு :—

கழுகு ஓங்கு பொங்கு எழு எனப் பதப்பிரிவு செய்க.

ஓங்கு என்ற சொல் ஒங்கு என வந்தது.

கருத்துரை

பொன்னம்பலத்துறையும் வேலவரே! வீணே உடல் அழியாது உய்ய அருள் செய்.

திருப்புகழ்

மந்தர மென்குவ டார்த னங்களி
லாரம முந்திட வேம ணம்பெறு
சந்தன குங்கும சேறு டன்பனி
நீர்கள் கலந்திடு வார்மு கஞ்சசி
மஞ்சுறை யுங்குழ லார்ச ரங்கயல்
வாள்விழி செங்கழு நீர்த தும்பிய கொந்தளோலை
வண்சுழ லுஞ்செவி யார்நு டங்கிடை
வாடந டம்புரி வார்ம ருந்திடு

விஞ்சையர் கொஞ்சிடு வாரி ளங்குயில்
மோகன வஞ்சியர் போல கம்பெற
வந்தவ ரெந்தவுர் நீர றிந்தவர்
போல இருந்ததெ ருைம யங்கிட இன்சொல்கூறிச்

சுந்தர வங்கண மாய்நெ ருங்கிநிர்
வாருமெ னும்படி யால கங்கொடு
பண்சர சங்கொள வேணு மென்றவர்
சேம வளங்குறு தேன ருந்திட
துன்றுபொ னங்கையின் மீது கண்டவ
ரோடு விழைந்துமெ கூடி யின்புறு மங்கையோரால்

துன்பமு டங்கழி நோய்சி ரங்கொடு
சீபுழு வுஞ்சல மோடி றங்கிய
புண்குட வன்கடி யோடி ளஞ்சனி
சூலைமி குந்திட வேப றந்துடல்
துஞ்சிய மன்பதி யேபு குந்துய
ராழிவி டும்படி சீர்ப தம்பெறு விஞ்சைதாராய்

அந்தர துந்துமி யோடு டன்கண
நாதர் புகழ்ந்திட வேத விஞ்சைய
ரிந்திர சந்திரர் சூரி யன்கவி
வாணர்த வம்புலி யோர்ப தஞ்சலி
அம்புய னந்திரு மாலொ டிந்திரை
வாணிய ணங்கவ ளோட ருந்தவர் தங்கள்மாதர்

அம்பர ரம்பைய ரோடு டன்திகழ்
மாவுர கன்புவி யோர்கள் மங்கையர்
அம்புவி மங்கைய ரோட ருந்ததி
மாதர் புகழ்ந்திட வேந டம்புரி
அம்புய செம்பதர் மாட கஞ்சிவ
காம சவுந்தரி யாள்ப யந்தருள் கந்தவேளே

திந்திமி திந்திமி தோதி மிந்திமி
தீததி திந்தித தீதி திந்திமி
தந்தன தந்தன ஞத னந்தன
தானத னந்தன ஞவெ னும்பறை

செந்தவில் சங்குட னேமு ழங்கசு
    ரார்கள் சிரம்பொடி யாய்வி டுஞ்செயல் கண்டவேலா

செந்தினை யின்புன மேர்கு றிஞ்சியில்
    வாழுமி ளங்கொடி யாள்ப தங்களில்
வந்துவ ணங்கிநி ணேமு கம்பெறு
    தாளழ கங்கையின் வேலு டன்புவி
செம்பொனி னம்பல மேல கம்பிர
    காரச மந்திர மீத மர்ந்தருள் தம்பிரானே.

பதவுரை

அந்தர துந்துமியோடு உடன்=ஆகாயத்தில் ஒலிக்கும் பேரிகை வாத்தியத்துடன், கணநாதர் புகழ்ந்திட=கணத் தலைவர்கள் புகழ, வேத விஞ்சையர்=வேத மந்திரம் வல்லவர்கள், இந்திரர்=இந்திரர்கள், சந்திரர்=சந்திரர்கள், சூரியன்=சூரியன், கவிவாணர்=கவி பாடும் புலவர்கள், தவம் புரிகின்ற புலியோர்=தவத்தில் சிறந்த வியாக்கிரபாதர், பதஞ்சலி=பதஞ்சலி, அம்புயன்=பிரமதேவர், அம் திருமாலோடு=அழகிய நாராயணருடன், இந்திரை=இலட்சுமி தேவி, வாணி=சரஸ்வதி, அணங்கு அவளோடு அருந்தவர் தங்கள் மாதர்=அந்த தெய்வமாதுடன் அரிய தவமுனிவர்களின் பத்தினிமார்கள், அம்பரர்=விண்ணுலக வாசிகள், ரம்பையரோடு உடன் திகழ்=ரம்பையாதி தேவமாதர்களுடன் விளங்கும், மா உரகன் புவியோர்கள் மங்கையர்=சிறந்த நாகலோக மாதர்கள், அம்புவி மங்கையரோடு=மண்ணுலக மாதர்கள், அருந்ததி=அருந்ததி, மாதர் புகழ்ந்திடவே=ஏனைய பெண்மணிகள் ஆகிய அனைவரும் புகழ்ந்து துதி செய்ய, நடம் புரி=திருநடனம் புரிகின்ற, அம்புய செம்பதர்=தாமரை யன்ன சிவந்த திருவடியையுடையவருடைய, மாடு அகம்=பக்கத்திலும் உள்ளத்திலும் உறைகின்ற, சிவகாம சவுந்தரியாள் பயந்து அருள்=சிவகாம சுந்தரியாம் உமாதேவியார் பெற்றருளிய, கந்த வேளே=கந்தக் கடவுளே! திந்திமி திந்திமி தோதி மிந்திமி தீததி திந்தித தீதிதிந்திமி தந்தன தந்தனனு எனும் பறை=திந்திமி திந்திமி ......தந்தனனு என்ற ஒலியுடன் ஒலிக்கும் பறைகளும், செம் தவில்=செவ்விய தவில்களும், சங்கு உடனே முழங்க=சங்குகளும் முழங்க, அசுரார்கள் சிரம் பொடியாய் விடும் செயல் கண்ட வேலா=அசுரர்களின் தலைகள் பொடியாகப் போகும் செயலைச் செய்த வேலாயுதக் கடவுளே! செம் தினையின் புனம் ஏர் குறிஞ்சியில்=சிவந்த தினைப் புனத்தால் அழகிய மலை நிலமாகிய வள்ளிமலையில், வாழும் இளம் கொடியாள்=வாழ்ந்த இளங் கொடி போன்ற வள்ளிநாயகியின், பதங்களில் வந்து வணங்கி நிணே=திருவடிகளில் வந்து வணங்கி

நின்று, முகம் பெறு தாள் அழக=அப் பெருமாட்டிக்கு முன் தோன்றிய திருவடி அழகரே! அங்கையின் வேலுடன்= அழகிய திருக்கரத்தில் வேலாயுதத்துடன், புவி=இப்பூதலத்தில், செம் பொனின் அம்பல மேல்=செம்பொன் அம்பலத்தில், அகம் பிரகார ச மந்திர மீது அமர்ந்து அருள்=மேற்குப் பிரகாரத்தில் விளங்கும் கோயிலில் அமர்ந்து அருள் புரிகின்ற, தம்பிரானே=தனிப் பெருந் தலைவரே! மந்தரம் என் குவடு ஆர் தனங்களில்=மந்தரம் என்ற மலைபோல் விளங்கும் கொங்கைகளில், ஆரம் அழுந்திடவே=பொன்மாலை அழுந்தி விளங்க, மணம் பெறு சந்தனம்=நறுமணங் கொண்ட சந்தனம், குங்கும சேறுடன்=குங்குமப்பூ அரைத்த கலவைச் சேற்றுடன், பனி நீர்கள் கலந்திடுவார்=பனி நீர்களைச் சேர்த்து பூசிக் கொள்பவர், சசி முகம்=சந்திரனைப் போன்ற முகமும், மஞ்சு உறையும் குழலார்=மேகம் போன்ற கூந்தலையும் உடையவர்கள், சரம் கயல் வாள் விழி=அம்பு, கயல் மீன், வாள் இவை போன்ற கண்ணினர், செங்கழுநீர் ததும்பிய கொந்தளம்=செங்கழுநீர் மலர் சூடிய கூந்தலானது, ஓலை வண் சுழலும் செவியார்=காதணியில் நன்கு சுருண்டுள்ள காதினை உடையவர்கள், நுடங்கு இடை வாட நடம் புரிவார்=துவளுகின்ற இடையானது வாட நடனஞ் செய்பவர், மருந்து இடு விஞ்சையர்=வசிய மருந்து இடும் மாய வித்தையில் வல்லவர், கொஞ்சிடுவார்=கொஞ்சிப் பேசுபவர்,இளம் குயில்=இளங் குயில் போன்றவர்கள்; மோகன வஞ்சியர் போல்=காம மயக்கத்தைத் தரும் வஞ்சிக் கொடி போன்றவர், அகம் பெற வந்தவர்= தமது வீட்டிற்கு வந்தவர்களை, எந்த ஊர் நீர்=நீர் எந்த ஊர்? அறிந்தவர் போல இருந்தது எனு=முன்னமேயே அறிமுகம் ஆனவர் போல இருக்கின்றதே என்று கூறி, மயங்கிட இன் சொல் கூறி=அவர்கள் மயங்குமாறு இனிய மொழிகளைப் பேசி, சுந்தர வங்கணமாய் நெருங்கி=அழகுற்ற நேசத்துடனே அருகில் நெருங்கி, நீர் வாரும் எனும் படியால் அகம் கொடு=நீர் வாரும் என்று குறிப்பித்து வீட்டுக்குள்ளே அழைத்துப் போய், பண் சரசம் கொள வேணும் என்று=இசைப் பாடல்களால் இன்ப வேட்கையை உண்டாக்க வேண்டும் என்று கருதி, அவர் சேம வளம் துறு தேன்அருந்திட= அவருடைய செல்வம் என்ற வளஞ் செறிந்த தேனைப் பருகத் திட்டமிட்டு, துன்று பொன் அங்கையின்மீது கண்டு=நெருங்கி செல்வம் தங்கள் கையில் கிடைத்தவுடனே, அவரோடு விழைந்துமே கூடி=அவர்களை விரும்பித் தழுவி, இன்பு உறு மங்கையோரால்= இன்பம் அடைகின்ற பொது மாதர்களால், துன்பம்=துன்பமும், முடங்கு=முடக்கு வாதமும், அழி நோய்=உடலை அழிக்கும் நோய்களும், சிரங்கொடு=சிரங்கும், சீ புழுவும் இறங்கிய புண்=சீயும் புழுவும் நீரும் ஒழுகும் புண்களும், குடவன் கடியோடு=குடவுண்ணியால் கடிபட்ட விஷக்கடியும், இளம் சனி=இளமையில் வந்த ஜன்னி

நோயும், சூலை மிகுந்திடவே=சூலை நோயும் மிகுதியாக, பறந்து=உயிர் பறந்து போய், உடல் துஞ்சி=உடம்பு அழிந்து, யமன் பதியே புகும்=இயமனுடைய ஊரில் சேரும், துயர் ஆழி விடும்படி=துன்பக் கடலை அடியேன் கடக்கும்படி, சீர் பதம் பெற=உமது சிறந்த திருவடியைப் பெறவல்ல, விஞ்சை தாராய்=மந்திரத்தைத் தந்தருளுவீராக.

பொழிப்புரை

ஆகாயத்தில் ஒலிக்கும் துந்துமி முழங்கவும், கணநாதர்கள் புகழவும், வேத மந்திரத்தில் வல்லவரும், இந்திரர்களும், சந்திரர்களும், சூரியனும், கவிவாணர்களும், தவத்திற் சிறந்த வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும், பிரமதேவரும், அழகிய நாராயணரும், சரஸ்வதியும், முனிபத்தினிமார்களும், விண்ணுலகில் வாழும் அரம்பையர்களும், நாகலோக மாதர்களும், பூலோக மாதர்களும் புகழ்ந்து துதி செய்ய திருநடனம் புரிந்த தாமரை போன்ற திருவடியையுடைய நடேசப் பெருமானுடைய அருகிலும் திருவுள்ளத்திலும் உறைகின்ற சிவகாம சுந்தரி பெற்றருளிய கந்தவேளே! திந்திமி திந்திமி தோதிமிந்திமி தீததி திந்தித தீதி திந்திமி தந்தனதந்தன ஞதனந்தன தானத னந்தன என்ற ஒலியுடன் பறைவாத்தியங்களும், செவ்விய தவில்களும், சங்குகளும் முழங்க அசுரர்களின் தலைகள் பொடியாகுமாறு விடுத்த வேலாயுதரே! செந்தினைப் புனத்தினால் அழகிய மலைநிலத்தில் வள்ளி மலையில் வாழ்ந்த இளங்கொடி போன்ற வள்ளிநாயகியின் பாதத்தில் வந்து வணங்கி அவர் முன் காட்சி தந்து நின்ற திருவடியழகரே! வேலேந்திய கையுடன் பூதலத்தில் செம்பொன் அம்பலத்தில் உள்ள மேல் பிரகாரத்தில் விளங்கும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற தனிப்பெருந் தலைவரே! மந்தரமலை போன்ற கொங்கைகளில் பொன்மாலை அழுந்திக்கிடக்க, நறுமணம் பொருந்திய சந்தனமும் குங்குமச் செஞ்சாந்தும் பனி நீரும் அணிந்தவர்கள்; சந்திரனை யொத்த முகமும், மேகம் போன்ற கூந்தலும் உடையவர்கள்; அம்பு, கயல்மீன், வாள் என்ற இவை போன்ற கண்ணினர்; செங்கழுநீர் மலர் சூடிய கூந்தல் புரளும் ஓலையுடன் கூடிய காதினையுடையவர்கள்; துவள்கின்ற இடை வாட நடனஞ் செய்பவர்கள்; தம்மிடம் வந்தவர்கள் அன்புகொள்ள மருந்து இடும் வித்தையில் வல்லவர்கள்; கொஞ்சிப் பேசுபவர்கள்; இளங்குயில் போன்றவர்கள்; தமது வீட்டை நோக்கி வந்தவர்களை "நீர் எந்தவூர்?" "முன்பே

பழகியவர்போல் இருக்கின்றதே?'' என்றெல்லாம் பேசி காம மயக்கம் உண்டாகுமாறு உரையாடி, அருகில் வந்து "நீர் வாரும்'' என்று அழைத்துக் கொண்டுபோய், பண்ணிசையால் ஆசை லிலே விளைவித்து, வந்தவருடைய செல்வமாகிய தேனைப் பருக எண்ணி, கைக்குப் பணம் வந்தவுடன், விருப்பங்காட்டித் தழுவி மகிழ்கின்ற பொது மாதர்களால், துன்பமும், முடக்கு வாதமும், உடல் நலத்தைக் கெடுக்கும் நோய்களும், சிரங்கும், சீயும் புழுவும் நீரும் ஒழுகும் புண்களும், குடவுண்ணியால் ஏற்பட்ட விஷக்கடியும், இளஞ் ஜன்னியும், சூலை முதலிய நோய்களும் பெருக, உயிர் பறந்துபோய் உடல் அழிந்து, இயமனுடைய ஊர் புகும் துன்பக்கடலை அடியேன் கடக்கும்படி, தேவரீருடைய திருவடியைப் பெறவல்ல மந்திரத்தைத் தந்தருளுவீராக.

விரிவுரை

இத் திருப்புகழின் முற்பகுதி விலை மாதர்களின் சாகசத் திறத்தை விளக்கி விளம்புகின்றது.

மருந்திடு விஞ்சையர் :—

தமது பால் வந்த ஆடவர்களை என்றும் அகலாது மயங்கிக் கிடக்குமாறு மருந்திடுவார்கள்.

"கருப்பஞ் சாறெரு டரைத்துள உண்டைகள்
நிழற்கண் காண வுலர்த்தி மணம்பல தடவாமேல்
நெருக்கும் பாயலில் வெற்றிலை யின்புறம்
ஒளித் தன்பாக அளித்து'' —(நிறுக்குஞ்) திருப்புகழ்.

குடவன் :—

குடவுண்ணி என்ற ஒரு விஷப்பூச்சி. இது கடித்து உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கும்.

"சிலவிட மேய்ந்த சிறுபுண் குரம்பையில்
மசகமும் உலங்கும் வாய்ப்படைக் குடவனும்''
—காசிக் கலம்பகம் 58-உரை.

மாடகம் சிவகாம சவுந்தரி :—

மாடு அகம்—மாடு—பக்கத்திலும், அகம்—உள்ளத்திலும் இருப்பவர்.

நினை முகம் பெறு :—

நின்றே என்ற சொல் நினை என வந்தது. முகம் பெறு - தோன்றிக் காட்சி தந்து என்ற பொருளில் வந்தது.

கற்பு

நேரமில்லை

அரிகிருஷ்ணன் பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு உண்ண நேரமில்லை; உறங்க நேரமில்லை; தன்னைப்பற்றி எண்ணவும் நேரமில்லை. தாயுடன் பேசவும் நேரமில்லை. பணங்களை எண்ணவும், வியாபாரிகளுடன் உரையாடவும், வெளியூர் வியாபாரிகளுடன் தொடர்பு கொள்ளவும் நேரம் இன்றி இடர்ப்பட்டான்.

அவனுடைய மாளிகை கடல்போல் விசாலமாக விளங்கியது. மாளிகையில் ஆசனங்களும் நிலைக்கண்ணாடிகளும் காட்சிப் பொருள்களும் நிறைந்திருந்தன.

அரிகிருஷ்ணனுடைய தாயார் மகனுடைய போக்கைச் சிந்தித்தாள். மகனுக்கு அறவுரை கூறவேண்டும் என்று கருதினாள். ஒரு நாள் இரவு 10 மணிக்குமேல் அரிகிருஷ்ணன் சற்று ஓய்வாகச் செய்தித் தாள்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

தாய் மகனுடைய அருகில் அமர்ந்து, அன்புதோய்ந்த குரலில், "அரி! இப்படிப் பம்பரம்போல் சுழன்று தொழில் செய்கின்றனையே. உடல்நலத்துக்கே பாடுபட்டால் உயிர் கடைத்தேற வேண்டாமா? உயிர் ஈடேற வேண்டும் என்றால் இறைவனை நினைத்துச் சிறிது நேரமாகிலும் செபதபஞ் செய்யவேண்டும்."

"அம்மா! எனக்கு சுவாமியை நினைக்க நேரம் ஏது? நேரம் கிடைத்தால்தானே பக்தி செய்ய வேண்டும். நேரமேயில்லை. நான் என்ன செய்வேன்?"

மேலகம்பிர காரச மந்திரம் :—

சிதம்பரத்தில் மேல் பிரகாரத்தில் உள்ள தனிக் கோயிலில் முருகவேள் எழுந்தருளியிருக்கின்றார். இந்தக் கோயிலை இன்றும் செங்குந்தர்கள் பரிபாலித்துக் கந்தர் சஷ்டி விழா முதலிய நித்திய நைமித்திகங்களைச் செய்து வருகின்றார்கள்.

கருத்துரை

சிதம்பரம் கோயிலில் மேல் பிரகாரத்தில் எழுந்தருளிய வேலவனே! உன் பதம்பெறும் மந்திரத்தை உபதேசித்தருள்.

"மகனே! நேரம் இல்லை, நேரம் இல்லை என்கின்றனையே? உண்பதற்கு நேரம் இருக்கின்றது. உறங்குவதற்கு நேரம் இருக்கின்றது. பல் விளக்க நேரம் இருக்கின்றது. குளிப்பதற்கு நேரம் இருக்கின்றது. அலங்கரித்துக்கொள்ள நேரம் இருக்கின்றது. ஒன்னுக்கு இரண்டுக்குப் போக நேரம் இருக்கின்றது. இவைகளுக்கெல்லாம் நேரம் இருக்கின்றபோது, உன்னைப் படைத்து, ஒவ்வொரு கணமும் உன்னைக் காத்தருள்புரிகின்ற கருணாமூர்த்தியை ஒரு கணம் நினைக்க நேரம் இல்லையா? நேரம் இல்லையென்று வாரத்துக்கு ஒரு நாள் பல் விளக்குகின்றாயா? நேரம் இல்லையென்று மாதத்துக்கு ஒரு நாள் ஒன்னுக்கு இரண்டுக்குப் போகின்றாயா? நன்றாக உன்னிப்பார். அலைகள் வீசும் போதே கடலில் முழுகிக் குளிப்பதுபோல், உலக வேலைகளாகிய அலைகளுக்கு நடுவே இறைவனை நினைக்கவேண்டும். நம்முடைய வாழ்வு, நம்முடைய செல்வம், நம்முடைய பெருமை யாவும் விநாடியில் மாறிப் போகும்.

நளச் சக்கரவர்த்தி சமையல்காரனாக இருந்து துயரமடைந்தான். அரிச்சந்திரன் மயானங் காத்தான். சுகத்தின் உச்சியில் வாழ்ந்த பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் கானகத்தில் துன்பக்கடலில் முழுகித் தத்தளித்தார்கள். நமது வாழ்வு மாற்றமடைய நெடுநேரம் ஆகாது.

அரி! ஒரு கோடீச்சுரன் தனது வியாபாரத் தலத்தில் பஞ்சு மெத்தையின்மீது அமர்ந்து, கடிதங்களைப் பார்ப்பதும், பணங்களை எண்ணுவதும், வியாபாரிகளுடன் பேசுவதுமாக அஷ்டாவதானஞ் செய்து கொண்டிருந்தான்.

அவனுக்கு முன்னே ஒரு சாது வந்து நின்றார். அவருடைய திருமுகத்தில் வெண்ணீறும், கண்களில் ஞானவொளியும் திகழ்ந்தது.

கோடீச்சுரன் அப்பெரிய மகானைத் தலைநிமிர்ந்து பார்த்தான். அலட்சியமாகக் கருதி, தன் பெட்டியடி கணக்கரைப் பார்த்து பத்து காசு தருமாறு கட்டளையிட்டான். கணக்கன் பத்துக் காசுகளை சாது முன் நீட்டினான். சாது சிரித்தார். "அப்பனே! நான் காசுக்கு வரவில்லை; உனக்கு ஒரு அறவுரை கூற வந்தேன். ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப் பெற்ற பேருஞ் சதமல்ல; பெண்டிர் சதமல்ல; உன் மனைவியும், உன் பணியாளர்களும் உன்னை விரட்டுங் காலமும் வரக்கூடும். நீ பக்தி நெறி நின்று முக்தி நலம் பெறுக. உன்னை நீ உணர்ந்தாயில்லை. பொன்னையே பெரிதும் மதித்து உழலுகின்றாய். உன் வாயால் "பழநியப்பா!" என்று கூறு. அதைக் கேட்டு விட்டு நான் போவேன். பணம் காசு தேவையில்லை. குணம் கோடி பெறும். உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"பழநியப்பா" என்று சொல். நான் விடைபெற்றுப் போகின்றேன்" என்றார்.

கோடீச்சுரன் கோபத் தீயால் கொதிப்புற்றான். அவன் முகஞ் சிவந்து, "ஏய் பரதேசிப் பயலே! நீ என்ன பேசுகின்றாய்? யாரிடம் பேசுகின்றாய்? எனக்கு நேரம் கிடையாது... சாமியாவது சாத்தானாவது; இதெல்லாம் பிழைக்கத் தெரியாத பேயர்கள் பேசுவது. போ வெளியே போ" என்று கூறி சிங்கம்போல் கர்ஜித்தான்.

சாது மகான் புன்னகை தவழ்ந்த முகத்துடன் அசையாது நின்றார். கோடீக்சுரன் தன் காவல்காரனை அழைத்து இந்தச் சோம்பேறிப் பயலைப் பிடித்து வெளியே தள்ளு" என்றான். காவல்காரன் கையைப் பிடித்து ஈர்த்தான். அவரை அசைக்க முடியவில்லை. கடையில் உள்ள அத்தனை பேரும் தள்ளினார்கள். அவர் காற்றினால் அசையாமல் நிற்கின்ற மலைபோல் நின்றார். எல்லோரும் அயர்ந்து போனார்கள். ஆச்சர்யப்பட்டார்கள்.

சாது மகான் கோடீச்சுரனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "அப்பனே! இனி நீ வீட்டுக்குள் நுழையமாட்டாய். நுழைந்தால் உன் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார்கள். உன் மனைவி உன்னை விரட்டுவாள். பெரிய அவமானம் உண்டாகும். நான் போகின்றேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

சாது அஷ்டமாசித்தியில் வல்லவர். சித்திகள் அவருக்கு ஏவல் செய்யும். தன் யோகதண்டத்தை மந்திர சக்தியால் கோடீச்சுரனாகச் செய்தார். அந்த மாயக் கோடீச்சுரன் தன் பொன் மாளிகையடைந்தான். மாளிகைக் காவலன் வணங்கினான். உள்ளே சென்று சோபாவில் அமர்ந்தான். மனைவி ஓடி வந்தாள். என்ன சீக்கிரமாக வந்து விட்டீர்கள்? இரவு 11 மணிக்கு வருவீர்களே? இன்று இத்தனை சீக்கிரம் வந்துவிட்டீர்களே. ரொம்ப சந்தோஷம். மழை வந்தாலும் வரும்" என்று கூறி மிகவுயர்ந்த சிற்றுண்டி வகைகளைத் தந்து உபசரித்தாள்.

மாய கோடீச்சுரன் "பெண்மணீ! உலகம் வர வர ரொம்பக் கெட்டுப் போச்சு. எத்தனை எத்தனை தந்திரங்கள்? எத்தனை எத்தனை மாய வித்தைகள்? ஆ! ஆ! ஆச்சர்யம். ஒரு மாய வஞ்சகன் என் வடிவங்கொண்டு உலாவுகின்றானாம். மோசஞ் செய்யத் திட்டம் இட்டிருக்கின்றான். அவன் வந்தால் உள்ளே நுழைய விடக்கூடாது" என்று கூறினான்.

காவல்காரனைக் கூப்பிட்டு, "அடேய்! என் வடிவத்தில் ஒரு மாயக் கள்ளன் வருவான். அவனை நம் மாளிகைக்குள் நுழைய விடாதீர்கள். ஏதாவது வம்பு பேசினால் தடி எடுத்து அடித்து விரட்டி விடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

மாயக் கோடீச்சுரன் மனைவியுடன் பேசியும், குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவியும் பொழுது போக்கினான்.

இரவு 8 மணிக்கு உண்மையான கோடீச்சுரன் வந்தான். காவலன் தடுத்து நிறுத்தினான். பழிகாரப் பயலே! நீ யார்? எங்கள் கோடீச்சுரன் வடிவில் வந்து ஏமாற்றுகின்றாய். நிற்காதே. ஓடிப் போ'' என்றான்.

கோடீச்சுரன் பெரிய ஆச்சர்யமடைந்தான். அவனுக்கு நாணமும் கோபமும் பொங்கி வந்தன. "காவல! என்ன சொல்லுகின்றாய்? நான்தானே வீட்டு முதலாளி. உனக்கென்ன பயித்தியமா? மூளைக் கோளாறு? விலகு'' என்று சொல்லி உள்ளே நுழைய முயன்றான்.

காவலனுக்கும் கோடீச்சுரனுக்கும் உண்டான வாக்குவாதச் சண்டையைக் கேட்டு மனைவி வெளியே வந்தாள். "ஆ! இவன்தான். கள்ள வேஷக் கசடன். விடாதே, பிடி; அடி; உதை'' என்றாள்.

சமையல்காரன் காவலன் எல்லோரும் சேர்ந்து கோடீச்சுரனை நையப் புடைத்தார்கள். வெளியே விரட்டியடித்தார்கள்.

கோடீச்சுரன் செய்வதறியாது திகைத்தான். தெருத் தெருவாய் அலைந்தான். இரவெல்லாம் பட்டினியாகி நெளிந்தாள்.

பொழுது விடிந்ததும் நேரே காவல்துறை நிலையத்துக்குச் சென்றான். நான் இந்தவூர் கோடீச்சுரன். என்னை வீட்டில் நுழைய விடாமல் அடிக்கின்றார்கள்'' என்றான்.

காவல் துறை அதிகாரி அவனுடன் கோடீச்சுரனுடைய மாளிகையை யடைந்தார். அங்கு அதே வடிவில் வேறு கோடீச்சுரனைக் கண்டு திகைத்தார்.

மாயக் கோடீச்சுரன் காவல் துறையதிகாரியை வரவேற்று உபசரித்தான். இவன் எத்தன்; என் வடிவிலே வந்து பித்தலாட்டம் பண்ணுகின்றான். இவனை உதைத்து விரட்டுங்கள் என்றான்.

அதிகாரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. யார் உண்மையான கோடீச்சுரன் என்று கண்டு பிடிக்க முயன்றார்.

மாய கோடீச்சுரன் வீடு கட்டிய கணக்கு, மகளைக் கல்யாணஞ் செய்து வைத்த கணக்கு அனைத்தையும் கூறினான். உண்மையான கோடீச்சுரன் கேட்டு அவற்றை மறதியால் சொல்ல மயங்கினான்.

காவல் துறை அதிகாரி உண்மையான கோடீச்சுரனைப் பொய்யன் என்று தீர்ப்புக் கூறி உதைத்து விரட்டுமாறு உத்தரவிட்டார்.

காவல் துறையினர்கள் ஆளுக்கு ஒரு தடியெடுத்து அடித்தார்கள்.

கோடீச்சுரன் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடினான். எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாதவனாக ஆனான். கால் போன வழியே சென்றான்.

அப்போது சாது மகான் கூறிய அறவுரையை நினைத்தான். "ஆ! ஆ! மகான்களைப் பகைப்பதன் விளைவு இது" என்று எண்ணி ஏங்கினான்.

நேரே பழநிக்குச் சென்றான். "பழநியப்பா! பழநியப்பா!" என்று கூறி அலறினான். சரவணப் பொய்கையில் முழுகினான். மலை வலம் வந்தான். படியேறி பழநியப்பனைப் பணிந்தான். அகங்காரந் தணிந்தான். பக்தி நெறி நின்றான். பொறி புலன்களை வென்றான். பக்திச் சுவையுண்டான். பரமானந்தங் கொண்டான்.

இவ்வாறு சில வருடங்கள் உருண்டன. அவன் முன் அன்று வந்த சாது மகான் காட்சியளித்தார். "அப்பனே! இப்போது 'பழநியப்பா!' என்று சொல்ல நேரம் இருக்கின்றதா?" என்று கேட்டுச் சிரித்தார்.

கோடீச்சுரன் அவர் திருவடிமீது வீழ்ந்து அழுதான். "அடியேனைத் தடுத்தாட் கொள்ள வந்த தயாநிதியே! என் அஞ்ஞானத்தை யகற்றிய மெய்ஞ்ஞான மூர்த்தியே! இப்போது நான் திருந்தி விட்டேன்" என்றான்.

சாது "அப்பனே! உன் மாளிகைக்குப் போக விருப்பம் இருந்தால் சொல். உன்னை அங்கே போகச் செய்கின்றேன்" என்றார்.

"சுவாமி! சந்தனம் பூசிக்கொண்ட நான் சாணத்தைப் பூசிக் கொள்வேனா? இனி எனக்கு உலக வாழ்வு வேண்டாம்" என்றான். சாது அருள்புரிந்து மறைந்தார். அங்கே மாய கோடீச்சுரனும் மறைந்தான்.

ஆதலால் அந்தக் கோடீச்சுரன் கதியை எண்ணிப் பார். எந்த சமயத்தில் என்ன வரும் என்று யாராலும் சொல்லவோ நினைக்கவோ முடியாது. எனவே நேரம் கிடையாது என்று சொல்லாதே" என்று தாய் கூறினாள்.

அரிகிருஷ்ணன் கேட்டு உள்ளம் உவந்தான். தாய் மொழியைத் தலைமேற் கொண்டான். அதுமுதல் தன் அலுவல்களுக்கு இடையே தெய்வ பக்தியைச் செய்து வந்தான்.

முருகா

தொல்காப்பியமும் சைவசித்தாந்தமும்

இராவ் சாகேப், திரு.கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள்

தொல்காப்பியத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல விரவியுள்ளன வென்பர் ஆராய்ச்சியாளர். தொல்காப்பியம் தரும் எழுத்துக்களின் பெயர்களே மெய்ப்பொருளியல் பொதிந்த பெயர்களாக அமைந்துள்ளன. உயிர், மெய் என்ற எழுத்தின் பெயரும் வினை என்ற சொல்லின் பெயரும் மெய்ப் பொருளியல் (தத்துவப்) பெயர்கள் ஆவன. ஆன்மா என்ற வடமொழிப் பெயரும் உயிரென்ற தமிழ்ப்பெயரும் ஒரே பொருளைக் குறிப்பன. உலகத்து உயிர்கள்போன்று உயிரெழுத்துக்கள் எழுத்துலகில் இயங்குவதனுல் அவை உயிரெனப் பெயர் பெற்றன. மெய்யென்பது உடல் எனப் பொருள்படும். உடலை மெய்யென்றது மங்கல வழக்கன்று. இறைவன் – உயிர் – உலகு (மலம்) என்ற முப்பொருளுண்மையை வற்புறுத்துவது சைவசித்தாந்தம். ஆதலின் உலகின் மலக்கூறாகிய உடலை மெய்யென்றே கருதுவது சைவசித்தாந்தம்.

உடல் காரியமாய்த் தோன்றி, இருந்து ஒடுங்கினும் அஃது அழிவதன்று, ஒடுங்கி மலத்துளதாம். அழிவென்பதெல்லாம் மாற்றம் இல்லாமல் போவதன்று. உடலிறக்கக் காணினும் அவ்விறப்பென்பது அதன் மாற்றத்தின் அறிகுறியென்பர்.

வினை என்றது ஒரு பொருளின் தொழிலை அல்லது செயலை உணர்த்துவது. ஆன்மா, அல்லது உயிர் செயற்படுவதை, மெய்ப்பொருளியலார் வினை என்றே அழைப்பர். வினை என்பது வடமொழியில் கர்மா என்று பெயர் பெறும்.

"மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே"

(தொல். நூன்மரபு - கஅ)

என்று கூறுகின்றது தொல்காப்பியம்.

மெய்யின் வழியாக உயிர் தோன்றுகிறது. உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய், உயிர்பெற்ற மெய்யாகின்றது. அவ்வாறே உலகத்துயிர்களும் உடல்வழியே தோன்று கின்றன. உடல் உயிர் பெற்ற உடலாகின்றது. செயலற்ற மெய்யெழுத்துக்கள், உயிர் சேர்ந்தாலன்றி இயங்குவதில்லை,

உயிரின்றி அவற்றை ஒலித்தல் இயலாது. உயிர் சேர்ந்த பிறகே அவற்றின் வாழ்வு தொடங்குகின்றது. அதேபோல ஆன்மா அல்லது உயிர் தோன்றுவதற்கும் ஒரு பற்றுக்கோடு வேண்டும். அப் பற்றுக்கோடு உடலாக அமைகின்றது. இவ் வுயிர் மெய்யெழுத்தின் கூட்டங்கள் சொற்களாக, சொற்றொடர்களாக, மொழி உலகமாக அமைகின்றன. அதேபோல ஆன்மாவோடு சேர்ந்த உடல் ஒன்று பலவாகி இவ்வுலகமாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு மெய்யோடுயிர் சேரினும் உயிரினுடைய தன்மை மாறுவதில்லை என்று கூறுகின்றது தொல்காப்பியத்தின் மற்றொரு நூற்பா.

"மெய்யோ டியையினும் உயிரியல் திரியா"

(தொல் - நூன்மரபு, 10)

உயிரெழுத்து மெய்யெழுத்தோடு சேருகின்ற பொழுது அவ்வுயிரெழுத்தின் தன்மை மாறுவதில்லை. அதேபோல உடலோடான்மா சேரினும், அவ்வான்மாவின் தன்மை மாறுவதில்லை ஆன்மாவும் உடலும் வெவ்வேறு தன்மையுடையன. ஆனால் அவை ஒன்று சேர்கின்றபோது ஆக்கமும் பெருக்கமும் உண்டாகின்றன. ஆக்கமும் பெருக்கமும் நேரினும் ஆன்மா இயல்பு மாறுவதில்லை.

"மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்"

(தொல்-மொழிமரபு, 13)

என்றும் கூறுகின்றது மற்றொரு நூற்பா. இங்குத் தொல்காப்பியர் குறிப்பிடுதலை ஆழ்ந்து கருதுதல் வேண்டும். 'மெய்யினியக்க முயிரொடு சிவணும்' என்று தொல்காப்பியர் கூறினரிலர். ஏனைய உயிர்களினின்றும் அகரம் இங்குப் பிரிக்கப்பட்டுள்ளது. அது ஒரு தனித் தன்மையைப் பெற்றுள்ளது என இந்நூற்பா காட்டுகின்றது; அகரமும் இங்கு உயிர்க்குயிராக அமைகின்றது. அவ்வாறமைவதோடு மட்டுமின்றி மெய்யெழுத்துக்களுக்கும் அதுவே உயிராக அமைகின்றது.

அகரவொலி மற்ற எல்லா உயிர் ஒலிகளுக்கும் மெய்யொலிகளுக்கும் உயிராக இருப்பதுபோல இறைவன் எல்லா உயிர்களுக்கும் ஏனை உடல் பெற்ற எல்லா உயிர்களுக்கும் (ஆன்மாக்களுக்கு) உயிராகக் கலந்திருக்கின்றான். அகரம்

மற்ற எழுத்துக்களோடு கலந்திருப்பினும் அஃது அதன் தன்மையில் மற்ற எழுத்துக்களிலிருந்து வேறுபட்டது. அதுபோல இறைவனும், உயிர்களோடு கலந்திருப்பினும் உயிர்களின் வேருனவர். உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் தொழிற்படும்போது அகரம் உடனிருந்து அவற்ருேடு தொழிற்படுகின்றது. அதேபோல இறைவன் ஏனைய உயிர்களோடும், உலகப்பொருள்களினும் வேருயினும், அவை தொழிற்படும்போது அவ்வவற்றின் உடனுய் அமைகின்ருர். இம்மொழியிற் கருத்துக்கள் சிந்தாந்தக் கருத்துக்களுக்கு ஒப்புமை உடையனவாதலைக் காணலாம். இறைவன், ஆன்மாக்கள் உலகப் பொருள்கள் ஆகியவற்றினின்றும் பொருட்டன்மையால் வேருய், கலப்பினுலொன்ருய், தொழிற்படுங்கால் உடனுமாய் இருப்பனென்று சித்தாந்த சாத்திரம் கூறுகின்றது. அகரத்தினியல்பும் அவ்வாறே ஏனைய உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களினின்றும் பொருட்டன்மையால் வேருய், கலப்பினுலொன்ருய், தொழிற்படுங்கால் உடனுமாயிருத்தலைக் காண்க.

வினை என்பது தொழில், ஆன்மா தொழிற்படுவதற்கு இஃது ஒப்பாகும். தமிழெழுத்துக்களில் அகரத்தின் இயல்பைக் கொண்டு கடவுள் உண்மையை முற்றும் நிறுவ முதன் முதல் முற்பட்டவர் திருவள்ளுவர். இக்கருத்தின் விரிவைத் திருக்குறள் உரையாசிரியர்கள் உரையிலும், முதற்குறளுவமை என்ற நூலிலுங் காணலாம். மெய்கண்ட தேவரும் இவ்வகரத்தின் இயல்பைக் கொண்டு கடவுளுண்மையை நிறுவுகின்ருர்.

அவர் கூறுவதைக் காண்க.

"ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்ருல்
அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு"*

அகர உயிரில்லையாயின் எழுத்துக்களினியக்கம் இல்லை. அதுபோல கடவுளில்லையாயின் எப்பொருளின் இயக்கமும் இல்லை. அகரமும் மற்றையெழுத்துக்களும் வெவ்வேருக உளவாயினும்

---

* இருக்கு என்பது தமிழ் மந்திரம் என்ற பொருளில் திருக்குறளைக் குறிக்கும்.

அகரவொலியையின்றி அவ்வெழுத்துக்கள் தனித்து ஒலிப்ப தில்லை. அவ்வண்ணமே இறைவனும் உயிரும் வெவ்வேருயி னும் அவ்விறைவனையின்றி அவ்வுயி ரியங்குவதில்லை.

" மெய்யி னியக்க மகர மொடு சிவணும்"

(தொல் - எழுத்து - 46)

நச்சினர்க்கினியர் எழுதிய உரையையுங் காண்க. மெய்யெழுத் துக்களேயன்றி, அகரம் ஒழிந்த ஏனைய உயிரெழுத்துக்களும் அங்காந்தியலும் அகரவொலியின்றி இயங்கா. இதன் விரிவை முதற் குறள் உவமை என்ற நூலிற் காண்க.

அருணந்தி சிவாச்சாரியாரும் அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே என இக்கருத்தையே கையாள்வதைக் காண்க. மனவாசகம் கடந்தார், அவருடைய உண்மை விளக்கம் என்ற நூலில் அகர உவமையையும், இக்கருத்தையும் ஆளுவதைக் காணலாம்:

" அக்கரங்கட் கெல்லாம் அகரவுயிர் நின்ருற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினேம்—எக்கண்ணும்
நில்லா இடத்துயிர்க்கு நில்லா அறிவென்று
நல்லா கமம்ஓதும் நாடு." (உண்மை விளக்கம்—20)

உமாபதி சிவாச்சாரியாரும் அவருடைய 'திருவருட் பயன்' என்ற நூலில்.

" அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து "

என்ருர்.

மேலே கண்டவாறு சந்தான குரவர் மட்டுமன்றிச் சமய குரவர்களும் அகரவெழுத்தின் மெய்ப்பொருளியல்பைப் பயன் படுத்தியுள்ளதைக் காணலாம்.

' அகர முதலானை அணி ஆப்ப னூரானை '

—(சம்பந்தர்: ஆர்ப்ப - 5)

' ஆனத்து முன் எழுத்தாய் நின்ருன்போலும் '

—(அப்பர், ஆரூர் - 7)

' அகரம் முதலின் எழுத்தாகி நின்ருய் '

—(சுந்தரர், அரத் - 7)

சிவஞான போதத்தின் முதல் நூற்பாவே ஆண்பால்—பெண்பால் (உயர்திணை) அஃறிணை எனும் பாகுபாட்டைத் தழுவி அவன், அவள், அதுவெனத் தொடங்குகின்றது.

'தொல்காப்பியம் சிவமயம்' என்ற நூலொன்றிருந்ததாகத் தெரிகின்றது. இக்காலத்தே அது கிடைத்திலது. இறந்துபட்டதுபோலும். தொல்காப்பியம் சிவமயமென்னும் நூல் இயற்றப் பெற்றிருந்ததென்பது மறைஞான சம்பந்தர் செய்த 'பதிபசுபாசப் பனுவல்' என்ற 337 - குறள் வெண்பா நூலின் சிறப்புப் பாயிரம் அகவற்பா (35 அடியுள்ளது') கூறுகின்றது.

அது வருமாறு,—

"தாண்டவம் புரிவோன் சரண கமலன்
புந்தியில் நாளும் சிந்தனை பண்ணி
அப்பதி தன்னில் அருங்குகை மடத்தில்
எப்பதி யோரும் ஏத்தவும் இருந்தோம்
இகமது தன்னில் சுகனையொப் பானேன்
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்

மண்ணிடை மீண்டும் வருநலையொப் பானேன்
அருந்தமி ழுணர்வால் அகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியம் சிவமயம் செய்தோன்
....
சிவதரு மோத்தரம் தமிழாற் செய்தோன்
நண்ணிய தவமறை ஞானசம் பந்தன்
...."

எனக் குறிப்பிடுவதையுங் காண்க.

இம் மறைஞான சம்பந்தர் சந்தான குரவருள் ஒருவராகிய மறைஞான சம்பந்தரின் வேறானவராவார். [இவர் களந்தை ஞானப் பிரகாசரின் சிடராவார் என்பர் சிலர். இவர் பதினாறு நூல்களியற்றியுள்ளனர். அவற்றிலொன்று முத்தி நிலை. இந்நூலை மறுத்துத் தருமபுரம் குருஞான சம்பந்தர் 'முத்தி நிச்சயம்' என்ற நூலை எழுதினரென்பர். இவர் சிதம்பரம் கண் கட்டி மறைஞான பண்டாரத்தின் மாணவர் என்பாரும் உளர்.

இவ்வாறு தொல்காப்பியம் சைவசித்தாந்த மெய்ப்பொருளியலுக்கு அடிப்படையாகவும், அரணாகவும் அமைந்ததோடன்றி, சித்தாந்தக் கருத்துக்களுக்கு ஒரு பிரமாண நூலாகவும் அமைந்துள்ளது. சிவஞான சித்தியாருக்கு உரை எழுதிய அறுவருள் ஒருவரான மறைஞான தேசிகர் தொல்காப்பியத்தை ஒரு பிரமாண நூலாக ஆகமங்களோடு ஒத்த நிலையிற் கையாள்வதைக் காணலாம்.

கால தத்துவத்தை விளக்குமிடத்துப் பிரமாணவியல் 29 செய்யுளுரையில் :

"இதற்குப் பிரமாணம், 'பர மத நிராகரணம்', 'காரணாகம்', பௌட்கரம்' எனக் காண்க.

"இறப்பே நிகழ்வே எதிர தென்றும்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்
பொருள்நிகழ் உரைப்பது காலம் ஆகும்"
(தொல்-செய்யுளியல்-194)

என்றார் தொல்காப்பியர்." என ஆகமத்தோடு ஒத்த நிலையில் தொல்காப்பியத்தை எடுத்துக் காட்டுவதைக் காண்க.

ஆகமங்களோடு ஒத்த நிலையில் தொல்காப்பியத்தைக் கருதியதும் அதிலிருந்து கால தத்துவத்தை விளக்க மேற்கோள் காட்டுவதும் சித்தாந்தக் கருத்துக்களுக்கு உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டும். இங்கு மேற்கோள் காட்டிய தொல்காப்பிய நூற்பாவின் கருத்து இக்காலத்தே மேலைநாட்டு மெய்ப்பொருள் அறிஞர்கள் (தத்துவ அறிஞர்கள்) விளக்குவதை முற்றிலும் ஒத்திருக்கிறது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. மேலும் விளக்குதலுறின் பெருகும்.

மேலும் சிவஞான சித்தியார் பிரமாண இயல் 111-வது நூற்பாவின் கருத்தைத் தொல்காப்பியத்தின் நூற்பாவைக் கொண்டே இவ்வாசிரியர் விளக்குவதைக் காணலாம்.

சிவஞான சித்தியார் சுபக்கம் பிரமாண இயல் சூத்திரம்-2 அதி-2, செய்யுள்.111.

" உலகுடல் கரணம் காலம்
உறுபலம் நியதி செய்தி
பலஇவை கொண்டு கன்மம்
பண்ணுவ துண்ப தானால்
நிலவிடா திவைதாம் சென்று
நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா
தலகிலா அறிவன் ஆணை
அணைத்திடும் அருளி னாலே ".

மறைஞான சம்பந்தர் மேலதற்கோர் புறனடை உணர்த்துகின்றார்.

உலகு உடல் கரணம் காலம் உறுபலம் நியதி செய்தி பல இவை கொண்டு கன்மம் பண்ணுவது உண்பது

ஆனுல் புவனமும் தனுவும் கரணமும் காலமும் அதனுல் உறு விக்கும் விடயமும் அவ்விடயத்தை வரையறை பண்ணிப் புசிப் பிக்கும் நியதிதத்துவம் இவையிற்றின் தொழிலும் பலமும் ஆகிய எண்விதமான கரணங்களைக் கொண்டு சிவன் ஆன்மாக் கள் செய்த கன்ம பலன்களைச் செய்வதும் புசிப்பிப்பதும் ஆன இடத்து வினை முதலிய எண்வகையான் நிகழப்படும்.

வினை ஆன்மாக்கள் செய்யும் தொழில், செய்பவன் ஆன்மா செயப்படு பொருள் இருவினை, நிலன் அவ்வான்மாக்கள் இருக் கும் புவனம் காலம் முக்காலங்களையும் உண்டாக்கும் கால தத்துவம், கருவி முப்பத்தாறு தத்துவம், இன்னதற்கு என்பது இருவினைப் பயன்களைப் புசிக்க வேண்டிய காரணம், பயன் என்பது சுகதுக்கங்களைப் புசித்துத் தொலைந்த பின் கன்ம க்ஷயம் பிறந்து மோட்சம் அடைகை என அறிக.

மறைஞான தேசிகர் இச்செய்யுளுக்கு மேலே தரும் விளக் கத்தோடு தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் **113**-வது நூற்பாவை ஒப்பிட்டு நோக்குக.

" வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி என்ரு
இன்னதற் கிதுபயன் ஆக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே "

எழுவகை வேற்றுமையினும் காரக வேற்றுமை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ – ள்.) வினையும், கருத்தாவும், செயப்படுபொருளும் இடமும், காலமும், கருவியும் என்று சொல்லப்பட்டவற்ருேடு கொள்வதூஉம் பயனும் ஆகிய அவ்விரண்டொடும் தொகைஇ, அவ்வெட்டென்று சொல்லுவர் தொழிற் காரகம் என்றவாறு.

தொல்காப்பிய நூற்பாவின் சொற்களையே தேசிகர் எடுத் தாண்டு அவற்றைச் சித்தாந்தக் கருத்திற்குப் பொருத்திக் காட்டும் சிறப்பைக் காண்க. தொல்காப்பியம் கூறும் எழுத் தின் பெயர், அவற்றினியல்பு, சொற்களின் அமைப்பு முதலி யவை தொல்காப்பியர் ஏற்படுத்தினவையல்ல. இவற்றைக் குறித்துத் தொல்காப்பியர் உயிரென மொழிப, மெய்யென மொழிப என்றும், என்ப, என்மனுர் என்னும் சொல்லாட்சி களும், தொல்காப்பியத்திற்கு முன்பே இவை வழக்கத்திலிருந்

தன என்பதைக் காட்டும். பேச்சு மொழியிலிருந்து ஒலிகளைப் பிரித்தெடுத்து எழுத்திலக்கமும், கிளவியிலக்கமும் தோன்றிய வரலாற்றுக் கெட்டாத அப்பழங்காலத்தே மேலே கூறிய மெய்ப்பொருளியல் பெயர்கள் இடப்பட்டனவாதல் வேண்டும். தமிழ் மொழி என்னும் இயற்கைச் செம்மொழி என்று வகுக்கப் பட்டதோ, அல்லது என்று தொடங்கியதோ அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே மெய்ப்பொருளியல் அல்லது தத்துவக் கருத்துக்கள். தமிழ்நாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும். இவ்வாறு அம்மெய்ப் பொருளியல் பெயர்கள் வழக்கத்திலிருந்தாலன்றி மொழி அமைப்பிலவை இடம் பெற்றிருக்குமா என்பதைக் கருதுக. ஆதலின் வரலாற்றுக்கெட்டாத மிகப் பழங்காலத்திலிருந்தே சித்தாந்தக் கருத்துக்கள் தமிழ் நாட்டிலும், தமிழ் மொழியிலும் அமைந்திருந்தன என்பதைக் காட்டத் தொல்காப்பியத்திற்கும் சித்தாந்தத்தின் கருத்துக்களுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு தக்க சான்றாக அமைந்துள்ளது.

மொகஞ்சதாரோ, ஆரப்பா புதை பொருள்களை ஆராய்ந்த சர் ஜான் மார்ஷல் என்பவர், இப் புதை பொருளாராய்ச்சி பல வியப்புகளைத் தருவது. அவைகளைவிட மிக வியக்கத்தக்கது. சிவமதம் என்பது 'சால்கோ லித்திக் ஏஜ்' (Chalco lithic age) என்று பழம் பொருளாராய்ச்சியாளர் கூறும் மிகப் பழங்காலத்தில் அல்லது அதற்கு அப்பாலிருந்தும் இச்சிவமதம் தொடங்குகின்றதென்பதாகும். ஆதலின் உலகத்திலுள்ள எல்லா மதங்களுள் இதுவே மிகப் பழைமையானதென இடம் பெறுகின்றது. தொல்காப்பியம் காட்டும் தமிழ்மொழி இயலுக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கும் உள்ள தொடர்புகள் மேலே எடுத்துக் காட்டியவை, சர் ஜான் மார்ஷல் கூறும் கருத்துக்கு அரண் செய்கின்றன. கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முந்தியது மொஹஞ்சதாரோ பண்பாடு என்பது அப்புதை பொருள் ஆராய்ச்சியாளர் கருத்து — இவ்வையாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது சைவ மெய்ப்பொருளியல் கருத்துக்களாதல் வேண்டும்.

மூடன்

(ஆசிரியர்)

வளமை மிகுந்த மைசூர் நாட்டில் ஓர் ஏழையிருந்தான். அவன் நேர்மையாளன். ஆனால் அறிவுக்கும் அவனுக்கும் ஆயிரம் மைல். குடும்ப பாரம் அவனை அழுத்தி நசுக்கியது. கல்வி ஞான மில்லாத அவன் தொலைவில் உள்ள காட்டில் சென்று மரங்களை வெட்டிச் சுட்டுக் கரியாக்கி நாட்டில் கொணர்ந்து விற்று வாழ்ந்தான். அற்ப வருவாயில் அரை வயிற்றை நிரப்பி குறைபட்டு வாழ்க்கையை நடத்தினன். குடும்பம் பெரிது, வருவாய் சிறிது.

மைசூர் நாட்டையாண்ட மன்னவர் கருணையுள்ளம் படைத் தவர். ஏழைகட்கு உதவும் இன்னருட் கொண்டல். வேந்தர் பெருமான் வேட்டையாடிக் குதிரைமீது ஆரோகணித்து வந்து கொண்டிருந்தார்.

வழியில் கரிமூட்டையைத் தலையில் சுமந்து வரும் ஏழை யைக் கண்டார். அவன் உடம்பு எலும்புந் தோலுமாக இருந்தது. குழிந்த கண்ணும், வழுக்கைத் தலையும், கிழிந்த உடையும், ஒட்டிய வயிறும் உடைய அவ்வறியவனைக் கண்டு மன்னவருடைய மனம் இரக்கமுற்றது. உள்ளம் உருகியது; அவன்மீது அன்பு பெருகியது. அவனுடைய வறுமையை மாற்றி அவனைப் பெருஞ் செல்வனகச் செய்து பார்க்க விரும்பினர்.

விறகுவெட்டி எரியிட்டுக் கரியாக்கி விற்கும் அந்த ஏழையை அழைத்தார் “அப்பா! உனக்கு என்ன வருவாய்.”

அரசர் பெருமானே! ஒருநாள் முழுதும் மரம் வெட்டிச் சுட்டுக் கரியாக்கி விற்ருல் ஒரு ரூபாய் வரும். எனக்கு ஆண் குழந்தை 6, பெண் குழந்தை 4. நான் ஒன்று; என் மனைவி ஒன்று ஆக பன்னிரண்டு பேர் வயிறு வளர்க்க வேண்டும். இதனைத் தவிர வேறு எனக்கு ஒரு தொழிலுந் தெரியாது. என்னமோ ஆண்டவன் இதன்மூலம் அரைவயிறு கஞ்சி படி யளக்கின்ருன். மனைவிக்குச் சீலை கிடையாது; குழந்தை களுக்குச் சட்டை கிடையாது; தலைக்கு எண்ணெய் கிடையாது.

வறுமையாகிய தீயில் வீழ்ந்த புழுக்களைப்போல் துன்பத்தில் துடித்துக் காலந் தள்ளுகிறோம்.''

''அப்பா! நீ வருந்தாதே. நான் வேந்தன். உன்னைக் கோடீசுரனாகச் செய்ய முடிவு செய்துளேன். எனக்குச் சொந்தமான ஒரு சந்தனக் காடு அருகில் உளது. அதனை உனக்குத் தருகிறேன். அதன் மூலம் சுகப்படுவாயாக.''

ஏழைக்கு அகமும் முகமும் மலர்ந்தன. பலமுறை அரசரைப் பணிந்தான். நீங்கள் தருமராசா. நல்லாயிருக்கணும். எனக்கு உதவிய இந்தக் கருணையை என்றும் மறவேன். உங்களுக்கு தெய்வம் உதவி செய்யட்டும்'' என்றான்.

மன்னர் மனம் மகிழ்ந்து அரண்மனை சேர்ந்தார். ஓர் ஏழையைத் தனவந்தனாகச் செய்தோம்'' என்று எண்ணி எண்ணி இன்புற்றார்.

ஓராண்டு கழிந்தது. அந்த ஏழையைப் பார்க்க விரும்பினார் அரசன். கோவணாண்டி கோடீச்சுரனாக ஆகியிருப்பான். அவன் குடிசை மாளிகையாக மாறியிருக்கும். அவன் கட்டியிருந்த கந்தை பட்டு பீதாம்பரமாகக் காட்சியளிக்கும்'' என்று பகல் கனவு கண்டு சென்றார்.

ஏழை பழைய நிலையில்தான் இருந்தான். அதே குடிசைதான். கந்தல் உடைதான்; வற்றிய உடம்புதான். மன்னவர் திடுக்கிட்டார். சந்தனமரம் ஒருமரம் ஆயிரம்ரூபாய் பெறுமதியாயிற்றே. ஆயிரம் ஆயிரம் மரங்கள் அடர்ந்த சந்தன வனத்தை வழங்கினோமே? இவன் பழைய தரித்திரனாகவே யிருக்கின்றானே? என்று எண்ணி ஆச்சர்யமடைந்தார். சந்தன வனத்தைப் பார்த்தார். எல்லா மரங்களும் வெட்டப்பட்டு ஒரு மரம் மட்டும் நின்றுகொண்டிருந்தது.

அரசன் அவனைப் பார்த்து, ''அப்பா! உனக்கு விலைமதிக்கவொண்ணாத சந்தன வனத்தை வழங்கினேனே? நீ பெரும் பணக்காரனாக விளங்க வேண்டுமே. எல்லா மரங்களையும் வெட்டி என்ன செய்தாய்?'' என்று கேட்டார்.

''அரசர் பெருமானே! ஒவ்வொரு மரமாக வெட்டிச் சுட்டுக் கரியாக்கி விற்றேன். ஒரு மரத்தை வெட்டிச் சுட்டால் ஒரு ரூபாய் பெறுமதியுள்ள கரியாகும். இதை வைத்துத்தான் ஏதோ மானத்துடன் காலங் கழிக்கின்றேன்.''

இதைக் கேட்ட அரசர் திடுக்கிட்டார். அட பாவி! கெடுத்துவிட்டாயே! இது சந்தன வனமாயிற்றே. ஒரு சந்தன மரம் ஆயிரம் ரூபாய் பெறுமதியாயிற்றே. சந்தன மரத்தை வெட்டிக் கட்டையாக்கி விற்றிருந்தால் நீ கோடீச்சுரனாக ஆகியிருப்பாய். சந்தன மரத்தைக் கரியாக்கி விற்பதா? இது என்ன பேதைமை? இதோ இருக்கின்ற ஒரு மரத்தை வெட்டிக் கட்டையாக விற்பனை செய்'' என்றார். அந்த ஏழை ஒரு மரத்தை வெட்டிக் கட்டையாகச் செய்து விற்றான். ஆயிரம் ரூபாய் வந்தது. பிறகு அவன் வருந்தினான். இத்தகு உயர்ந்த மரங்களைக் கரியாக்கி விற்றேனே என்று எண்ணி எண்ணி ஏங்கினான்.

இதன் உட்பொருள்:

அந்த ஏழை ஆன்மா ;
காடுதான் உடம்பு ;
நம்முடைய பிராணவாயுதான்—சந்தனமரம்
மன்னர் – ஆண்டவன்.

கடவுள் இந்த உடம்பாகிய வனத்தையும் பிராணவாயுவாகிய சந்தன மரத்தையும் ஏழையாகிய ஆன்மா என்ற நமக்குப் பரம காருண்யத்தால் வழங்கினார். நாம் இந்த பிராணவாயுவை பஜனை, ஜெபம், பூஜை, பாராயணம் என்ற வழியில் செலவழித்துப் பரகதி என்ற பெரும்பொருளை யடையாமல், அவநெறியாகிய நெருப்பில் பிராணனாகிய சந்தன மரத்தை எரித்துப் பாவமாகிய கரியைச் செய்து அவலநிலையடைகிறோம். என்னே பேதைமை? "அந்தக் கரி வியாபாரிக்கும் நமக்கும் என்ன வேற்றுமை? உய்த்துணருங்கள். காலம் விலையில்லாதது. நமது மூச்சு மதிக்கமுடியாத மாணிக்கம். நாம் நமது மூச்சை சீட்டு விளையாட்டிலும், குதிரைப் பந்தயத்திலும், மதுபானத்திலும், மாதராசையிலும் போக்குகின்றோம். இயமன் வரும்போது, கோடி பவுன் கொடுத்தாலும் ஒரு மூச்சைப் பெற முடியுமா? அந்தோ! அறியாமை; அறியாமை.

சந்தன மரத்தை மரமாக விற்றுப் பொருள் ஈட்டுவது போல், ஒவ்வொரு பிராணவாயுவையும், தெய்வ வழிபாட்டிலும், பற்றற்ற சேவையிலும், பாராயணத்திலும், பக்தி நெறியிலும் செலவிட வேண்டும்.

மகாபாரதம்

அநுசாஸன பர்வம்

(34-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான அறங்கள்

யுதிஷ்டிரர் "பிதாமகரே! மனிதன் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான அறங்களை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டார்.

பீஷ்மர் "அரசனே! முன்னர் வியாச பகவான் எனக்குச் சொன்ன தரும ரகசியங்களைக் கூறுகின்றேன். ஊக்கத்துடன் கேள். இது தேவரகசியம்.

ஒரு செக்கு பத்துக் கசாப்புக் கடைகளுக்குச் சமானம். பத்துக் கசாப்புக் கடைகளுக்குச் சமானம் ஒரு சாராயக் கடை. ஒரு வேசித்தொழில் பத்துச் சாராயக் கடைகளுக்குச் சமானம். பத்து வேசிகளுக்குச் சமானம் ஓர் அரசன். ஆகவே அரசனுக இருப்பது எளிதன்று. குடிகள் செய்யும் பாவங்களில் நாலில் ஒரு கூறு அரசனைச் சாரும். அரசன் மிகுந்த எச்சரிக்கையாகக் குடிகளை நல்வழிப்படுத்தி அரசுபுரிய வேண்டும்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுங் கூறும் நூல்கள் பரிசுத்தமானவை. அவற்றில் அறத்தைக் கூறும் நூல் உயர்ந்தது. தரும சாத்திரங்கள் தேவர்களால் செய்யப்பட்டவை. அவை கேட்கவேண்டியவை. அவற்றில் சிராத்தத்திற்குரிய பித்ருக்களின் இரகசியங்களும் எல்லாத் தேவர்களின் இரகசியங்களும் முழுதும் சொல்லப்படுகின்றன. நுட்பமான விஷயங்கள் உள்ளதும் பெரும்பயன் தருவதும் ஆகிய அந்த தரும சாத்திரங்களை எப்போதும் படிக்கின்றவர்களும், அவற்றை மறவாமல் இருப்பவர்களும், பிறருக்குச் சொல்லுகிறவர்களும் சாட்சாத் நாராயணரே.

அதிதிகளைப் பூசிக்கும் மனிதன் கோதான பலனையும் தீர்த்த ஸ்நானபலனையும் யாகபலனையும் அடைவான். அதிதி

களை ஆராதிப்பவனைப் பாவம் பற்றுவதில்லை. இறந்தபின் மேலுலகம்போய் அழியாத இன்பத்தை யடைகின்றான்.

தேவதூதன் கூறியது

இந்திர சபையில் ஒருசமயம் ஒரு தேவதூதன் கண்ணுக்குத் தெரியாமல் இருந்து கூறலானான். "ரிஷிகளும், பித்ருக்களும் சேர்ந்த இந்தப் பேரவைக்கு வைத்தியர்களில் சிறந்தவர்களாகிய அசுவினிதேவர்களின் கட்டளையினால் நான் வந்திருக்கின்றேன். சிராத்தத்தில் கொடுப்பவனுக்கும் புசிப்பவனுக்கும் பெண் சேர்க்கை கூடாது என்பது ஏன்? மூன்று பிண்டங்களைத் தனித்தனியே பகுத்து வைப்பது எதற்காக? முதற் பிண்டம் யாருக்கு உரியது? முடிவில் இருப்பது யாருக்கு உரியது? இதனை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்" என்றான்.

பித்ருக்கள் "விண்ணில் உலாவுபவனே! உனக்கு நல்வரவு. மங்களம் உண்டாகுக. இரகசியமான விஷயத்தை நீ கேட்டனை. சிராத்தத்தைக் கொடுத்தும் புசித்தும் எவன் பெண்சேர்க்கை செய்கின்றானோ அவனுடைய ரேதசில் பித்ருக்கள் ஒருமாதம் படுத்திருக்கின்றனர். முதற் பிண்டம் நீரில் முழுகிக் கர்த்தாவை தூய்மைப்படுத்தும். நடுப்பிண்டத்தைக் கர்த்தாவின் மனைவி ஒருத்திமட்டும் புசிக்கவேண்டும். மூன்றாவது பிண்டத்தை நெருப்பில் போடவேண்டும். இந்தச் சிராத்த விதியைத் தருமங் கெடாமல் இருக்கும்படி சொன்னோம். அவனுடைய பித்ருக்கள் மனமகிழ்ந்து திருப்தியாயிருப்பர். அவனுக்கு சந்ததி வளர்கின்றது. அவனுக்கு அழியாத புண்ணியம் வருகின்றது" என்று சொன்னார்கள்.

தேவதூதன் "பித்ருக்களுக்குக் கொடுக்கும் மூன்று பிண்டங்களும் தனித்தனியாகப் பிரிந்து போவதைப்பற்றித் தெளிவாகக் கூறினீர்கள். முதற் பிண்டம் நீரில் போடப்பட்டு யாரைச் சேருகின்றது? எந்தத் தேவதைக்குத் திருப்தியுண்டாக்குகின்றது? எப்படிப் பித்ருக்களைக் கரையேற்றுகின்றது? நடுப்பிண்டத்தை மனைவி புசிப்பது எதற்காக? நெருப்பில் இடும் கடைசிப் பிண்டத்தின் கதி என்ன? அது யாரைச் சேருகின்றது? இப்படி இம்மூன்று பிண்டங்களின் முடிவையும் பயனையும் செய்கையையும் முறையையும் எது யாரைச் சேரும் என்பதையும் நான் கேட்க விரும்புகின்றேன்" என்று சொன்னான்.

பித்ருக்கள் "ஆகாயத்தில் உலாவுபவனே! ஆச்சர்யமான இரகசியத்தை நீ கேட்டாய். இதை மார்க்கண்டேயர் ஒருவர் தான் சொல்லவல்லவர். அவர் ஒருவரே நன்கு அறிவார்" என்றுர்கள். மார்க்கண்டேயர் கூறலானுர்.

"சிறந்த அறிஞனே! மூன்று பிண்டங்களின் முடிவையும் ஊக்கத்துடன் என்னிடங் கேள். நீரில் இட்டபிண்டம் சந்திரனை மகிழ்விக்கின்றது. சந்திரன் தேவர்களையும் பித்ருக்களையும் திருப்திப்படுத்துகின்றுன். அந்தணர்களால் அனுமதி கொடுக்கப் பெற்ற மனைவி நடுப்பிண்டத்தை உண்பதனுல் பித்ருக்கள் புத்திரனை விரும்புகின்ற கர்த்தாவுக்குப் புத்திரனைக் கொடுக்கின்றுர்கள். நெருப்பில் போடப்பட்டதால் பித்ருக்கள் திருப்தியடைகின்றுர்கள். திருப்தியடைந்து விரும்பினவற்றைக் கொடுக்கின்றுர்கள். இப்படி மூன்று பிண்டங்களின் முடிவையும் பற்றி உனக்குப் பூரணமாகப் புகன்றேன். சிராத்தஞ் செய்விப்பவனும் சிராத்தஞ் செய்பவனைப்போல் சிராத்த விரதத்தை அனுசரிக்க வேண்டும். அந்த நாளில் பெண் சேர்க்கை கூடாது" என்று கூறினுர்.

வித்யுத்ப்ரபர் என்ற ஒரு முனிவர் அங்கே சூரிய ஒளியுடன் இருந்தார். இந்திரனைப் பார்த்து, "மனிதர்கள் மதியின்றி உயிர்களைக் கொல்லுகின்றுர்களே? அவர்களுக்குப் பரிகாரம் உண்டா?" என்று வினுவினுர். இந்திரன் "கொலை புலை செய்தவர்கள் கயை கங்கை பிரபாச தீர்த்தம் இவைகளில் முழுகினுல் பாவநீக்கம் பெறுவார்கள்" என்றுன்.

வித்யுத்ப்ரபர் "இந்திரனே! மிக்க நுட்பமான தருமத்தைச் சொல்லுகின்றேன் கேள். ஆலம் விழுதின் கஷாயத்தை உடம்பில் தேய்த்துக்கொண்டு, தினைமாவைப்பூசி நீராடி, அறுபதாங் குறுவையன்னத்தைப் பாலுடன் புசித்தால் எல்லாப் பாவங்களாலும் விடுபடுவான். சிவலோகத்தில் சிவபெருமானும் பிருகஸ்பதியும் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். மலைமீது ஏறி ஒற்றைக் காலில்நின்று கைகளை உயரக் கூப்பி சூரியனைப் பார்த்திருக்க வேண்டும். சூரிய கிரணங்களால் தாபமுற்றவன் பாவங்களிலிருந்து விலகி உபவாசப் பயனையடைவான்" என்றுர்.

இந்திரன் பிருகஸ்பதியைப் பார்த்து, தரும ரகசியங்களைக் கேட்டான். வியாழபகவான் "இந்திரனே! சூரியனுக்கு எதிரே

சிறுநீர் விடுகின்றவர்கள் எண்பத்தாறு ஆண்டுகள் துன்புறு வார்கள். காற்றைப் பகைப்பவர்களுக்கு சந்ததி கருவிலேயே கரைந்து போகும். ஜ்வாலையுடன் கூடிய அக்கினியில் ஓமஞ் செய்யாதவர்கள் நற்கதியடையமாட்டார்கள். இளங்கன்றுள்ள பசுவைக் கறந்து பாலைக் குடிக்கின்றவர்களின் குழந்தைகளுக் கும் குழந்தைகள் பிறக்கமாட்டா. இது சத்தியம்'' என்றார்.

பித்ருக்கள், "அத்திக்கட்டையால் செய்த ஏனத்தில் தேனு டன் எள்கலந்த நீரை அமாவாசையில் விடுகின்ற மனிதர்கள் சிராத்தம் சரியாகச் செய்தவர்கள் ஆகின்றார்கள்'' என்றார்கள்.

இந்திரன் திருமாலைப் பார்த்து, "கமலக்கண்ணரே! தேவ ரீர் எதனால் திருப்தியடைகின்றீர்?'' என்று கேட்டான். திரு மால் கூறுகின்றார். "புரந்தரனே! வேதத்தை ஓதுகின்ற அந்த ணர்களை வழிபடும் மனிதர்களிடம் நான் கருணைபுரிகின்றேன். நான் சக்கரத்தால் அசுரர்களைக் கொன்றேன்; வராக வடி வெடுத்து இரணியாட்சனை வதைத்து நிலத்தைக் காப்பாற்றி னேன். வாமன வடிவுடன் பலியை அடக்கி அருள்புரிந்தேன். ஆதலால், குள்ளமானவனையும், சக்கரத்தையும் பூசிக்கின்றவர் களிடம் நான் திருப்தியடைகின்றேன்'' என்றார்.

பலதேவர் என்ற ரிஷி, மனிதர்களுக்குச் சுகந்தரும் ஒரு பரம ரகசியத்தைக் கேளுங்கள். எந்த மனிதன் காலையில் எழுந்து பசுநெய் தயிர் கடுகு தினை இவற்றைத் தொடுகின் றானோ அவன் பாவத்தினின்றும் விடுபடுகின்றான்.

தேவர்கள் "நீர் நிரம்பிய அத்திமரப் பாத்திரத்தை யெடுத் துக்கொண்டு வடக்கு முகம்பார்த்து சங்கல்பத்துடன் எந்த உபவாசம் தொடங்கினாலும் அவனிடத்தில் தேவதைகள் திருப்தியடைகின்றார்கள். நினைத்த காரியங்கள் கைகூடும். அறிவில்லாதவர்கள் வேறு கருமங்களை வீணாகச் செய்கின்றார் கள். தாம்பிர பாத்திரமும் சிறந்தது. தேவபூசை தாம்பிர பாத்திரத்தால் செய்வது சிறப்பு'' என்றார்கள்.

அக்கினி, "நெருப்பையும், பசுக்களையும், அந்தணர்களை யுங் காலால் தொடுபவன் நரகத்தையடைவான்'' என்றார்.

வசிட்டர் முதலிய சப்த முனிவர்கள், பிரமதேவரை வலம் வந்து வணங்கி, பொருள் இல்லாத ஏழைகள் என்ன கருமஞ் செய்தால் யாகத்தின் பயனை யடைவார்கள்?'' என்று கேட் டார்கள்.

பிரமதேவர் "சிறந்த முனிவர்களே! மனிதர்களுக்கு மிக்க நன்மையையும் மங்களத்தையும் தருவதாகிய அதிருட்பமான கேள்வியைக் கேட்டீர்கள்! தை மாதம் சுக்லபட்சம் ரோகிணி நட்சத்திரத்தில், ஊக்கத்துடன் நீராடி ஒற்றைத் துணியுடன் மேல்மூடு இல்லாத இடத்தில் படுக்கவேணும். சந்திர கிரணங்களை அவன் நுகர்வதனுல் மகாயாகங்களின் பயனையடைவான். யாருக்குந் தெரியாத பரம ரகசியத்தை உங்களுக்குச் சொன்னேன்" என்று கூறினுர்.

விபாவசு என்ற சூரியன், "பூர்ணிமையில் சந்திரன் உதயமாகும்போது அவனுக்கு எதிரில் நின்று இரு கரங்களில் நீரையும் நெய் கலந்த அட்சதைகளையும் பூசையாகக் கொடுக்க வேண்டும். அதனுல் மூன்று அக்கினிகளிலும் ஓமம் செய்த பயன் உண்டாகும். அமாவாசையன்று மரத்தை வெட்டுகின்றவன் புத்தியில்லாதவன். ஓர் இலையை உதிர்த்தாலும் அவனைப் பிரம்மஹத்தியணுகும். அமாவாசையன்று பல் கொம்பினுல் பல் விளக்குபவன் சந்திரனைத் துன்புறுத்தினவனுவான். அவனைக் கண்டு பித்ருக்கள் நடுங்குகின்றுர்கள். தேவர்களும் புண்ணியங்களில் அவன் தரும் அவிசை வாங்கமாட்டார்கள். பித்ருக்களும் அவன்மீது கோபிப்பதனுல் சந்ததி கெடும்" என்று சொன்னுன்.

தௌமியர், "உடைந்த பாத்திரங்கள், உடைந்த கட்டில், கோழி, நாய், வீட்டிற்குள் முளைத்த மரம் இவையெல்லாம் தீயவை. உடைந்த பாத்திரம் வீட்டில் இருந்தால் கலகம்; உடைந்த கட்டில் இருந்தால் தனநாசம்; கோழியும் நாயும் வீட்டில் இருந்தால் தேவர்கள் நாம்தரும் நிவேதனங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மரத்தினடியில் பூச்சிகள் இருப்பது நிச்சயம். ஆதலால் வீட்டில் மரத்தை நடலாகாது" என்று சொன்னுர்.

ஜமதக்கினி "எவனுக்கு உள்ளம் பரிசுத்தம் இல்லையோ அவன் அசுவமேத யாகஞ் செய்தாலும் நூறு வாஜபேய யாகங்கள் செய்தாலும், பெரிய சத்திரயாகஞ் செய்தாலும், தலைகீழாகத் தொங்கித் தவஞ் செய்தாலும், நரகம் போவது திண்ணம். தூய உள்ளம் படைத்தவன் ஒரு படி மாவைத் தானஞ் செய்தாலும் நற்கதி யடைவான்" என்றுர்.

அருந்ததி வாக்கு

தேவர்களும் முனிவர்களும் பித்ருக்களும் வசிட்டருக்கு நிகரான தவமுள்ள அருந்ததியைப் பார்த்து "அம்மா! சூட்சும மான தருமங்களைக் கேட்க விரும்புகின்றோம். எது அதிசூட் சுமமான தருமம் என்று உனக்குத் தோன்றுகின்றதோ அதைச் சொல்" என்று கேட்டார்கள்.

அருந்ததி, "உங்கள் அருளினால் முக்கிய நுண்ணிய அறங் களை யுரைப்பேன். தினத்திற்கு ஒரு கபிலையாகப் பன்னிரு ஆண்டுகள் தானஞ் செய்கின்றவனும், ஆனி மாதத்தில் புஷ் கர க்ஷேத்திரத்தில் லட்சம் கோதானம் செய்பவனும், அடை கின்ற புண்ணிய பலன்கள் ஓர் அதிதியைத் திருப்தி செய்பவ னுக்கு நிகராகமாட்டா. மற்றொரு நுட்பமான தருமத்தைக் கூறுகின்றேன், கேளுங்கள். காலையில் எழுந்து நீராடி உணவு செய்யாமல் தருப்பைகளும் தண்ணீரும் எடுத்துக்கொண்டு பசுக்களின் நடுவில் சென்று, தருப்பைகளினால் பசுக்களின் கொம்புகளில் நீரைத் தெளித்து அந்தக் கொம்பின் நீரைத் தலை யில் தெளித்துக்கொள்ள வேண்டும். அதனால் வரும் புண்ணி யத்தைக் கேளுங்கள். மூன்று உலகங்களிலும் சித்தர்கள் சார ணர்கள் முனிவர்கள் இவர்களால் அடையப்பட்ட புண்ணிய தீர்த்தங்கள் என்று பேர் பெற்றவை எத்தனையோ அத்தனை தீர்த்தங்களிலும் முழுகிய பயனும் பசுவின் கொம்பின் நீர் தலை யில் படுவதும் சமம்" என்று மொழிந்தாள். இந்தச் சொல்லை பிரம்மதேவர் "ஆ ஆ" என்று கொண்டாடினார்.

பூதங்கள் "உடுத்த ஆடையை மேலே தரித்தும், மேலா டையை உடுத்தும் மாறுபடுத்துகின்றவர்களையும், புலால் உண்பவர்களையும், மரத்தடியில் படுப்பவர்களையும், உணவைத் தலையில் வைத்துக்கொள்பவனையும், கால் வைக்குமிடத்தில் தலை வைத்துப் படுப்பவனையும், நீரில் மலஜலம் விடுபவர்களை யும் நாங்கள் பிடித்துத் துயர் செய்வோம். எந்த வீட்டில் அல் லும் பகலும் அக்கினியும், புலித்தோலும், புலியின் பற்களும், மலையாமையும், நெய்ப் புகையும் பூனையும் கருப்பு அல்லது சிவப்பு ஆடும் இருக்குமோ அந்த வீட்டில் பூதங்களும் பைசா சங்களும் நுழையவில்லை" என்று கூறின.

"மகேச்சுரர் கோதான பலனைக் கூறினார். கந்தக் கடவுள், கருத்த காளையின் கொம்புகளிலிருந்து மண்ணையெடுத்து

மூன்று நாள் நிராடினல் பாவங்கள் எல்லாம் விலகும். அத்தி மரப் பாத்திரத்தில் தேன் கலந்து சமைத்த அன்னத்தை வைத்து அதனைப் பூர்ணிமையில் சந்திரன் உதிக்கும்போது பலியாகப் போடவேண்டும். இந்தத் தருமத்தின் பலன் அழி யாதது'' என்று கூறினர்.

இவ்வாறு முனிவர்களும் தேவர்களும் கூறிய இந்த தரும நுட்பங்களைப் படிப்பவன் எல்லா நலன்களையும் அடைவான்'' என்று கூறினர்.

புசிக்கத் தகாத இடம்

தருமர் "பாட்டனரே! யாரிடம் புசிக்கலாம்; யாரிடம் புசிக் கக் கூடாது. இவற்றை எனக்குத் தெரிவிக்க வேண்டும்'' என்று கேட்டார்.

பீஷ்மர் "உத்தமமான வழியில் பொருள் தேடுகின்றவ னிடம் புசிக்கவேண்டும். அந்த உணவு குலத்தை வளர்க்கும். புத்தியைப் பெருக்கும்; மருத்துவன், ஆயுதத்தால் பிழைக் கின்றவன், கிராமாதிகாரி, புரோகிதன், ஜோதிஷன் இவர்களு டைய அன்னத்தை ஒருபோதும் தெரிந்தவன் புசிக்கக்கூடாது. புசிக்கத் தகாதவனிடம் புசித்தவன் பாவத்தையடைந்து நாய் முதலிய விலங்குகளாகப் பிறப்பான்.

விபசாரி, சிற்பி, வித்தையாடுகின்றவன், கோள் சொல்லு கின்றவன், கள்குடிப்பவன், நன்றி கொன்றவன், நம்பிக்கைத் துரோகம் செய்தவன் இவர்களின் அன்னம் மலமூத்திரங்கட்கு நிகரானது. அதனை ஒருபோதும் உண்ணக்கூடாது'' என்றார்.

தானஞ் செய்தவர்கள் அடையும் பயன்

ஒருவன் தக்கவர்க்குத் தானஞ் செய்யவேண்டும். சிறந்த வர்கட்குத் தில (எள்) அளவு தந்தாலும் மலையளவாகப் பெருகி குலமுழுதும் உய்வுபெறும்.

பிரதர்த்தனன் என்னும் காசிராஜன் அந்தணனுக்குத் தன் மைந்தனைத் தந்து நற்கதியடைந்தான். சங்கிருதியின் மைந்த னை ரந்திதேவன் வசிட்டருக்குத் தானஞ் செய்து மேலான புண்ணிய உலகங்களைப் பெற்றான். மகிமை பொருந்திய அம்பரீஷன் அளவற்ற மகிமையுள்ள அந்தணர்கட்குத் தன் அரசைத் தந்து அமரருலகத்தை யடைந்தான். சூரிய குமார

ஞன கர்ணன் இந்திரனுக்குத் தன் கவசகுண்டலங்கள் வழங்கி புகழும் புண்ணிய உலகும் பெற்ருன். பாஞ்சால தேசத்தரச ஞன பிரம்மதத்தன் சங்கநிதியைத் தந்து நற்கதியை யடைந் தான். பகீரதன் லட்சம் பசுக்களைக் கன்றுகளுடன் கோசல ருக்குக் கொடுத்து மேலான பதத்தை அடைந்தான். இவ்வாறு பல உத்தமர்கள் இனிய பல தானங்களை நல்கி நல்ல தானங் களை யடைந்தார்கள்.

தானம் ஐந்து வகைப்படும்; புகழுக்காகத் தருவது பயன் கருதித் தருவது; அச்சத்தால் தருவது; புண்ணியத்தை வேண் டித் தருவது; கருணையால் தருவது' என ஐந்து வகையாகத் தெரிந்தவர்கள் கூறுகின்ருர்கள்.

கண்ணன் பெருமை

தருமர் "பிதாமகரே! நாங்கள் மிகவும் பாக்கியசாலிகள். அறிவின் சிகரமாக விளங்கும் தங்களிடம் பலப்பல அறநெறி களை, தரும நுட்பங்களைக் கேட்டு மகிழ்ந்தோம். இவைகளைத் தெளிவாகச் சொல்லவல்லவர் தேவரீரை யன்றி யாருளர்? எங்கள் புண்ணியப் பயனுல் தாங்கள் எமக்குப் பாட்டனராகக் கிடைத்தீர். தங்களுக்கு வாழ்நாள் மிகக் குறைவாகவேயுளது' இன்னும் நாங்கள் அறியவேண்டியவைகளை உபதேசித் தருளும்" என்று இனிமையாகக் கேட்டார்.

பிஷ்மர், "தருமநந்தன! சிறந்த அறங்களைக் கேள். அவை பார்வதிக்குப் பரமேசுவரன் பகர்ந்தவை. பவித்திரமானவை. பாவங்களைப் பறந்து போகுமாறு செய்யும் ஆற்றல் படைத் தவை.

இதோ இங்கு நம்முடன் ஒருவராக அமர்ந்திக்கும் கண்ணபிரான் அளவற்ற மகிமையுள்ளவர். நாராயணமூர்த் தியேயான இவர் ஒரு சமயம் புத்திரவரம் பெறவேண்டி, பரம சிவத்தை நாடி பன்னிரு ஆண்டுகள் தீக்ஷை எடுத்துக்கொண்டு மலையில் வசித்தார்.

கண்ணபிரானைக் கண்டு மகிழ நாரதர் பர்வதர், வியாசர், தேவலர், காசிபர், ஜமதக்கினி, தௌமியர், வால்மீகி முதலிய சிறந்த மாமுனிவர்கள் வந்து சேர்ந்தார்கள். கண்ணபிரான் அவர்களை அன்புடன் வரவேற்று இன்னுரைகூறி உபதேசித் தார். அம்முனிபுங்கவர்கள் மனமகிழ்ந்து அவரைப் புகழ்ந் தார்கள்.

“புருஷோத்தமரே! நீரே உலகங்களைப் படைப்பவர்; நீரே அவற்றை யழிப்பவர்; வெப்பமும் நீரே; தட்பமும் நீரே; ஆதியும் நீரே; அந்தமும் நீரே; சத்தியமும் நீரே; யாகமும் நீரே உம்மைவிட வேறு ஒன்றுமில்லை” என்று துதிசெய்தார்கள்.

அப்போது தவசீலராக விளங்கும் கிருஷ்ணருடைய திருமுகத்திலிருந்து ஒரு தீயுண்டாயிற்று. அத்தீயினால் எதிரில் இருந்த மரங்களும் விலங்குகளும் நிறைந்த செழிப்புள்ள மலை எரிந்து சாம்பராயிற்று. திரும்பவும் கிருஷ்ணர் கருணையுடன் பார்த்தமாத்திரத்தில் அம்மலை முன்போல் செழிப்புற்றது.

இந்த அற்புதத்தைக் கண்டு முனிவர்கள் திகைப்புற்றார்கள். அச்சமுற்றார்கள். ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு ஒன்றும் பேச நாவெழாமல் தியங்கி மயங்கினார்கள். கண்ணபிரான், “முனிவர்களே! அஞ்சற்க. நான் சிவத்தை வேண்டி தவத்தை மேற்கொண்டேன். என் தவத்தீ வெளிப்பட்டு இம்மலையை எரித்தது. மீண்டும் என் கருணையினால் தழைத்தது. உங்களைப் பார்த்து நான் பேரானந்தமடைகின்றேன். நீங்கள் தவசித்தி பெற்றவர்கள்; திவ்ய ஞானமுள்ளவர்கள்; எல்லாவுலகங்கட்கும் செல்லவல்லவர்கள்; சாஸ்திர ஞானத்தாலும் ஆத்ம ஞானத்தாலும் தூயராக இருப்பவர்கள்; உலகங்களின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் உணர்ந்தவர்கள்; பாவங்களை யறியாதவர்கள். சகல கலைகளையும் அறிந்தவர்கள். நீங்கள் வாழ்நாளில் கண்டு—கேட்ட அரிய நிகழ்ச்சிகள் பல இருக்குமே? அவற்றை எனக்குச் சொல்லுங்கள். தபோதனர்களாகிய உங்கள் வாக்கு அமுதம் போன்றது. நல்லமுதம் போன்ற உங்கள் சொல்லமுதத்தைப் பருக நான் ஆவல் கொண்டுளேன். ஆன்றோர்களின் வாக்கு சிந்தைக்கு இனியது; செவிக்கினியது. உங்கள் அநுபவத்தைச் சொன்னால் என் உள்ளங் குளிரும். அதனை நான் பலருக்கும் உரைப்பேன். உயிருக்கும் பயன் விளையும்” என்றார்.

முனிவர்கள் “கண்ணா! மணிவண்ணா! நீர் எங்களைப் புகழ்வது கூடாது. நீர் எல்லாம் அறிந்தவர். உம்மையன்றி உலகம் இல்லை. நீர் உலக நலனுக்காக வினவுகின்றீர் போலும். இந்த நாரத முனிவர் ஒருவர்தான் சொல்லவல்லவர். இவர் முன் ஒரு சமயம் இமாசலத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டார், கேட்டார். ஆதலால் நாரதர் அதனைக் கூறுவார்” என்றார்கள்.

நாரதர் கண்ணபிரானைத் தலையினால் வணங்கி பார்வதிக்குப் பரமசிவனார் உபதேசித்த தத்துவங்களைக் கூறலானார்.

பார்வதி பரமேசுரர் உபதேசம்

"யதுகுலதிலகரே! நான் எப்போதும்போல் தீர்த்தயாத்திரை செய்து கொண்டிருப்பேன். ஒரு சமயம் இமயமலையில் உள்ள தேவவனத்தைக் கண்டேன். தேவர்களும் முனிவர்களும் அரம்பையரும் துதிசெய்ய பரமேசுவரர் அங்கு உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருந்தார், அருகில் மரகதக் கொடிபோல் உமாதேவியார் இருந்தார். திசை பாலகர்களும் நாகர்களும் பூதங்களும் கணங்களும் அப்பசுபதியை பக்தியுடன் துதி செய்துகொண்டிருந்தார்கள். உமாதேவியார் திருவிளையாடலாகச் சிவமூர்த்தியின் கண்மலர்களைத் தமது கரமலர்களால் மூடினார். அப்போது உலகம் எல்லாம் இருள் சூழ்ந்து எல்லோரும் இடுக்கண் உற்றனர். முனிவர்கள் தேவர்கள் மனிதர்கள் யாவரும் ஆ! ஆ! என்று அலறினார்கள். அப்போது சிவமூர்த்தி தமது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்தார். அந்த அக்கினி நேத்திரத்திலிருந்து ஒரு தீப்பொறி தோன்றியது. அதனால் வளமையான இமாசலம் எரிந்து கரிந்துவிட்டது. தன் தந்தையின் இடமாகிய இமாசலம் எரிந்ததைக் கண்டு அல்லல்பட்டு அரனாரை அஞ்சலி செய்தாள். சிவபெருமான் தேவியை மகிழச் செய்யும் பொருட்டு அம்மலையை அருட் கண்ணால் பார்த்தருளினார். இமாசலம் முன்னைவிடப் பன்மடங்கு செழிப்புற்றது.

ஐம்முகங்கள்

உமாதேவியார் சிவமூர்த்தியைப் பார்த்துக் கேட்கலானார். "தேவதேவரே! தங்களுடைய ஐந்து முகங்களின் தத்துவம் யாது? தேவரீருடைய கீழ்த்திசை நோக்கியுள்ள திருமுகம் பார்ப்பதற்கு ஆச்சாயமாக இருப்பது ஏன்? வடக்கிலும் மேற்கிலும் உள்ள திருமுகங்கள் அழகாக இருப்பதேன்? தென்திசை நோக்கியுள்ள ஜடைகளுடன் கூடியுள்ள திருமுகம் அச்சத்தை விளைவிப்பதாக இருப்பது ஏன்? கண்டங் கருத்திருப்பது ஏன்? தாங்கள் சந்திரனைச் சூடியிருப்பதன் காரணம் யாது? புலித்தோலை யுடுத்திருப்பதன் காரணம் யாது? பினாகம் என்ற வில்லை ஏன் தாங்குகின்றீர்? விடைவாகனம் எவ்வாறு வந்தது? இவைகளை எனக்குச் சொல்லியருளும்" என்று வினவினார்.

சிவபெருமான் "பெண்ணரசியே! விண்ணை நோக்கிய திருமுகம் ஈசானம். அது ஆளுந்தன்மையுடையது. கிழக்கே நோக்கிய முகம் தத்புருஷமுகம்; தவநிலையில் உள்ளது; வடக்கே நோக்கிய வாமதேவ முகம் வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும்; மேல்திசை நோக்கியது சத்யோஜாதம்; அது எப்போதும் உலக நலன்களை யருளியவண்ணம் திகழும்; தெற்கு நோக்கிய முகம் அகோரம். சங்காரம் செய்வது.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் தோன்றியது. அதன் வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் மாலயனுதி வானவர்கள் என்னை அடைக்கலம் புகுந்தார்கள். அந்த நஞ்சை உண்டு கண்டத்தில் தரித்து நீலகண்டன் என்று பேர் பெற்றனன்.

முன்னொரு காலத்தில் தாரகவனத்து இருடிகள் "கர்மாவே பயன்தரும்; வினைபயனைத் தரக் கர்த்தா ஒருவன் வேண்டற்பாலதன்று" என்று கூறி என்னைப் பகைத்து, அபிசார ஓமஞ் செய்து புலியை யுண்டாக்கி என்னைக் கொல்ல ஏவினர்கள். அப்புலியை உரித்து உடையாக உடுத்திக்கொண்டேன்.

தட்சனுடைய சாபத்தால் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்த சந்திரன் என்னைத் தஞ்சம் புகுந்தான். இப்பிறை மதியைக் கருணையினுல் சென்னியில் சூடிக்கொண்டேன். அதனுல் சந்திரசேகரன் என்ற பேர் பெற்றேன்.

முன்னொரு யுகத்தில் கண்ணுவர் என்னும் முனிவர் கடுந் தவஞ் செய்துகொண்டிருந்தார். அவரைப் புற்று மூடியது. அவர் தலையில் மூங்கில் வானளாவி முளைத்தது. அதனைத் தாங்கியவண்ணந் தவஞ்செய்தார். பிரமதேவர் அவருக்கு வரமளிக்கச் சென்றுர். அந்த மூங்கில் பயன்படவேண்டும் என்று கருதி அதனை எடுத்து அடிப்பகுதியை வில்லாகச் செய்து பிநுகம் என்ற பேர் இட்டு என்பால் தந்தார். இடைப் பகுதியை வில்லாகச் செய்து சார்ங்கம் என்ற பேரிட்டுத் திருமாலிடம் தந்தார். முனைப்பகுதியை காண்டீவம் என்ற வில்லாகச் செய்து சந்திரனுக்கு ஈந்தார்.

உலகம் எல்லாம் ஒடுங்கியபோது அறம்மட்டும் சிதைந்து ஒடுங்காமல் எருது வடிவுடன் என்பால் எய்தியது. அத்தரும விடையை நான் வாகனமாகக் கொண்டேன். அதைக் கொடி

யாகவுங் கொண்டேன். உலகத்தைத் தாங்கும் என்னை அறந் தாங்குகின்றது'' என்று மொழிந்தருளினர்.

உமாதேவியார் ''திரிசூலபாணியே! நீர் சிறந்த மாடமாளிகைகளில் வசிக்காமல் கொடிய பயங்கரமான மயானத்தில் இருக்கின்ற காரணம் யாது?'' என்று வினவினர். தேவதேவர் ''தேவியே! உலகம் எல்லாம் ஒடுங்குமிடம் மயானம். எல்லோரும் ஒற்றுமைப்பட்டுச் சேருமிடம் மயானம்; அது தூய்மையானது; சர்வசம்மார மூர்த்தியாகிய நான் எல்லாம் ஒடுங்கும் பரிசுத்தமான மயானத்தில் உறைகின்றேன். அது ருத்ரபூமி எனப்படும்'' என்று கூறியருளினர்.

பார்வதியம்மையார் ''பரம்பொருளே! உலகத்தில் நிலை பெற்றிருக்க ஒழுக்கங்களையும் அறநெறிகளையும் எனக்குக் கூறுவீர்'' என்று கேட்டார்.

பரமேச்சுரர் ''பார்வதி! அந்தணர்கள் சிறந்தவர்கள். அவர்கள் எப்போதும் வேதங்களை ஓதிக்கொண்டு உலக நலன் கருதி நல்ல வேள்விகளைச் செய்துகொண்டும், உத்தமமான கருமங்களைச் செய்துகொண்டும் இருக்கவேண்டும்; அரசர்கள் அறநெறியில் மக்களை ஆட்சிபுரிய வேண்டும்; வைசியர்கள் அறநெறியில் வாணிபம் புரிந்து பொருள் ஈட்டவேண்டும்; வேளாளர்கள் விருந்தோம்பி அறம் புரிந்து ஒழுகவேண்டும். அந்தணன், அரசன், வைசியன் என்ற மூவரும் இருபிறப்பாளர்கள். வைசியர்கள் எள், வாசனைப்பண்டம் இவைகளை விற்கக் கூடாது.

ஆச்சிரமங்கள்

சதா வேதங்களைப் பயின்றுகொண்டு சீலமுடன் இருப்பது பிரம்மசரியம்; இல்லறத்தான் பிரம்மசாரி, வானப்பிரஸ்தன், சன்யாசி என்ற மூவருக்கும் உதவி புரிந்துகொண்டு ஐந்து வகையான யாகங்களைச் செய்துக்கொண்டிருக்க வேண்டும். மனைவியுடன்—அல்லது தனித்து வனத்தில் வாழ்ந்து பொறி புலன்களை அடக்கித் தவஞ் செய்வது வானப்பிரஸ்தம்; எல்லாவற்றை ஒருங்கே விட்டுவிடுவது சந்யாசம். சந்யாசி மன உறுதியுடன் ஒன்றையும் விரும்பாமல் தவவொழுக்கத்துடன் இருக்கவேண்டும்.

தேவி! தவஞ்செய்வோரில் பலப்பல நெறிகள் உள. கல்லி ஞல் தேய்த்து உண்பவர் அச்மகுட்டர்; பல்லிஞல் தான்யங் களை கொறித்து உமியை நீக்கியுண்பவர் தந்தோலூகலர்; சிலர் உதிர்ந்த இலேகளைமட்டும் புசிப்பர்; சருகு பட்சணிகள்; சிலர் இலையைமட்டும் உண்பார்கள். பத்ராசனர் எனப்படுவர். உதிர்ந்த தான்யங்களைப் பொறுக்கியுண்பர், இது உஞ்ச விருத்தி. சிலர் தண்ணீர் நுரையைமட்டும் உண்பர். கட்டை விரல் அளவுள்ள வாலகில்யர் என்ற ரிஷிகள் சூரியனுடன் சஞ்சரித்து சூரியகிரணத்தையே உணவாகக்கொண்டு திரிபவர் கள். அவர்களால் உலகம் நிலேபெறுகின்றது. பல மகான் கள் உலகங்கள் உய்யவேண்டும் என்று தவஞ் செய் கின்ருர்கள்.

பெண்மணியே! அறங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது கொல்லாமையே யாகும். உபவாசம் சிறந்த பயனைத் தரும்.

வினைப்பயன்

மக்களில் சிலர் இன்பமாக வாழ்கின்ருர்கள்; சிலர் துன்பத் தில் துடிக்கின்ருர்கள். இதற்குக் காரணம் அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளேயாகும். எவன் முற்பிறப்பில் தான தருமங்களைச் செய்தவனே அவன் மறுபிறப்பில் தனதானியங் களை யுடையவனுகி இன்புறுகின்ருன். எவன் பரமலோபியாகி, யாருக்கும் எப்போதும் ஒன்றையும் கொடுக்காமல் இருப்பானே அவன் மறுபிறப்பில் பலப்பல முயற்சி செய்து பயன் விளை யாது பரதவிக்கின்ருன். சிலர் தளர்ந்த பருவத்தில் தருமஞ் செய்வார்கள். அவர்கள் மறுபிறப்பில் தளர்பருவத்தில்தான் செல்வங் கிடைக்கப் பெறுவார்கள்.

அழகிஞல் கர்வமடைந்தவர்கள் மறுபிறப்பில் விகார ரூபிகளாகப் பிறப்பார்கள். ஏழைக் குழந்தைகளைப் படிப்பித்த வர்கள், கலைக்கூடம் கட்டினவர்கள் மறுபிறப்பில் பேரறிஞ ராய் பெருமையடைவார்கள். குருநாதனிடம் பக்தியாக ஒழுகி னவன் மறுபிறப்பில் நினைவாற்றலும் ஞானவானுகவும் இருப்பான்.

எவன் தன்னை அதிகம் படித்தவன் என்று வித்யா கர்வத் துடன் இருப்பானே? எவன் பிறரை எப்போதும் நிந்திப் பானே? எவன் மற்ருெரு புலவனைக் கண்டு பொருமைப்படு

வாரோ அவர்கள் எல்லாம் மறுபிறப்பில் மூடர்களாகப் பிறக்கின்றார்கள்.

எவர்கள் பிறர் துயரை தம் துயரமாக எண்ணி சதா பிறருக்கு உதவுவார்களோ? அவர்கள் மறுபிறப்பில் நல்ல மாட மாளிகையுடனும் சிறந்த ஆசனங்கள் படுக்கைகளுடனும் பணியாளர்களுடனும் சுகபோகமாக வாழ்வார்கள்.

எவன் பிறர் மனைவியைப் உற்றுப் பார்ப்பானோ அவன் கண் குருடனாகப் பிறக்கின்றான். எவன் பிறர் இரகசியங்களை உற்றுக் கேட்பானோ அவன் செவிடனாகப் பிறக்கின்றான். எவன் சதா பிறரை நிந்தித்துக்கொண்டிருக்கின்றானோ அவன் ஊமையாகப் பிறக்கின்றான். பெரியோர்களைப் பழித்தவனுக்கு வாய்ப்புண் உண்டாகும். தன் வீட்டுக்கு வந்த விருந்தினருக்கு உணவு தராதவன் மறுபிறப்பில் அஜீரண நோயால் வேதனைப்படுவான். பிறர் மாதரையும் கன்னியரையும், விதவிகளையும் சேருகின்றவன் மறுபிறப்பில் நீர்விடும் குறியில் நோய் பலபெற்றுப் பெருந் துயரமடைவான். கோயில் உடைமைகளை உண்டவர்கள் வாயினாலேயே மலங் கழிக்கும் வௌவாலாகப் பிறப்பார்கள். தேவி! எந்த எந்த அங்கங்களால் மனிதர்கள் பாவங்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு அந்த அந்த அங்கங்கள் வருத்தமடையும் எனத் தெரிந்துகொள்.

உமையே! வியாபாரம் புரியும்போது அளவுப் படிகளைக் குறைக்கின்றவர்கள், மறுபிறப்பில் குள்ளர்களாகப் பிறப்பார்கள். நான் என்ற செருக்கால் பிறரை அவமதித்தவர்களும், பெரியோர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் பரிகசித்தவர்களும் மறுபிறப்பில் பித்தரும் பேயருமாய்த் திரிந்து பெருந் துயரம் அடைவார்கள். உயிர்களை வதைப்பவர்கள் மறுபிறப்பில் பிள்ளைப்பேறு இன்றித் துயரமடைவார்கள். எருதுகளின் விதையையடித்துத் துன்பஞ் செய்தவர்கள் மறுபிறப்பில் ஆண் தன்மையிழந்து அல்லல்படுவார்கள்.

(தொடரும்)